பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 03, புதன்கிழமை 17.05.2017 | கதிர் 192

உங்கள் மனம் விரும்பும்
வேலைவாய்ப்பை
உடன் பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web:www.winstarjaffna.com
Fb : winstarjob bank
021 320 2789

# ஒருபுறம் கூட்டமைப்புடன் பேசிக்கொண்டு மறுபுறம் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு!



## சீறுகின்றார் சிறிதரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 17

தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரசியற்தீர்வு என்பன குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசிக் கொண்டிருக்கின்ற சமநேரத்திலேயே தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புரீதியான நடவடிக்கைகளை நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இவ்வாறு சீற்றத்துடன் விசனம் தெரிவித்தார்.

காணாமற்போனோர் விவகாரம், அரசியற்கைதிகள்விடுதலை, மீள்குடியேற்றம், வேலை வாய்ப்பு போன்ற விடயங்களிலும் அரசியற் தீர்விலும் நல்லாட்சி அரசாங்கமும் இதய சுத்தியுடன் செயற்படவில்லை என்றும் சிறிதரன் குற்றஞ் சாட்டினார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து

பக்கம் 18 >>>

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டம் அமைச்சரவை நேற்று அங்கீகாரம்

### விரைவில் தேர்தல் நடத்துவதற்கு இதனால் வாய்ப்பு

கொழும்பு, மே 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டம்தொடர்பானவரைவை அமைச்சரவை நேற்று அங்கீகரித்ததாககொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அமைச்சரவை மாற்றம்நடக்கும்வரைஅமைச்சரவையைக் கூட்டமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார் என ஊடகங்களில்கடந்தவாரஇறுதியில் பரபரப்பாகச் செய்திகள்வெளியாகியிருந்தன.

பக்கம் 18 >>>

## யாழ். பல்கலைச் சமூகம் நேற்று கவனவீர்ப்புப் போர்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 17

வித்தியா படுகொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படலாம் என்று கூறப்படுகின்றதை அடுத்து அதனை ஆட்சேபித்தும் -

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில்உயிரிழந்த இருபல்கலைக்கழகமாணவர்களினதும்படுகொலைகள்தொடர்பாகத்துரிதவிசாரணை வேண்டியும் -

யாழ். பல்கலைக்கழக

பக்கம் 18 >>>

## அரசைச் சீண்டுகிறாராம் முதல்வர் விக்னேஸ்வரன்!





### அமைச்சர் எஸ்.பி. பாய்ச்சல்

கொழும்பு, மே 17

மீண்டும் சர்வதேச அழுத்தத்துக்குள் அரசைத் தள்ளி, நல்லிணக்க முயற்சிகளைக் குழப்பி, அரசாங்கத்தைச்சீண்டிப்பார்க்கிறார்வடக்குமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

- இவ்வாறு பாய்ந்திருக்கின்றார் அரசின் சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா.

பக்கம் 18 >>>

அளப்பு அருணாசலம்



பேசிப் பேசித்தானே இது வரை காலை வாரினவை....!

## அப்பாவிகளை கொலை செய்தோரை தண்டிப்பதை விட்டு என்னை ஏன் வைகின்றீர்கள் என சிவாஜிலிங்கம் கேள்வி

### திருமலை நினைவேந்தலில் அமைச்சர் ருவானுக்குப் பதில்

திருகோணமலை, மே 17

கொலைகாரர்களைத் தண்டிப்பதை விடுத்து என்னை ஏன் விமர்சிக்கிறீர்கள்? என வடக்கு மாகாணசபைஉறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பக்கம் 18 >>>

## மறிச்சுக்கட்டி நிலப் பிரச்சினை ஆராய மூவர் கொண்ட குழு

கொழும்பு, மே 17

மன்னார் மாவட்டம் முசலி மற்றும் மறிச்சுக் கட்டிப் பிரதேசத்தில் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும்முஸ்லிம்களின்காணி விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதியின் ஆலோசனையுடன் மூவர்கொண்டகுழு

பக்கம் 18 >>>

## மஹிந்த அணி நாளை கண்டியில் யுத்த வெற்றிக் கொண்டாட்டம்

கொழும்பு, மே 17

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்த போர் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வை மஹிந்த ஆதரவு கூட்டு எதிரணியினர்நாளைகண்

பக்கம் 18 >>>

## நாளை மறுதினம் தொடக்கம் மீள ஜி.எஸ்.பி. வரிச்சலுகை!

கொழும்பு, மே 17

தைத்த ஆடைகள் உட்பட சில உள்நாட்டுத் தயாரிப்புப் பொருள்களை சுங்கத்தீர்வையின்றி ஐரோப்பிய சந்தைக்குள் அனுமதிப்பதற்கான ஜி.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகைநாளை மறுதினம்முதல் மீண்டும்

பக்கம் 18 >>>

# நீதியை நிலை நிறுத்துவதில் சமரசமின்றி உறுதியாய் நிற்பதே வீழ்த்தப்பட்ட நம் உறவுகளுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

கொழும்பு, மே 17

திட்டமிட்டு எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட இனப் படு கொலைக்கு சமரசம்செய்யாது, விட்டுக் கொடுக்காமல், நீதியை நிலைநிறுத்துவதற்குஉறுதியாய் நிற்பதே வேண்டுமென்றுகொன்றொழிந்து வீழ்த்தப்பட்ட உறவுகளுக்கு நாம் செலுத்தக் கூடிய உயரிய அஞ்சலியாக இருக்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறது தமிழ் மக்கள் பேரவை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் நாளை ஆகும். அதை ஒட்டி அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு :-

எமது மக்களின் நீதிக்கான நெடும்பயணத்தின் மறக்க முடியாத ஒரு துயரம் மிக்க தினம் மே 18.

எம்மக்கள்மீதுநெடுங்காலமாக இழைக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின்உச்சமாக 2009மேமாதத்தில்முள்ளிவாய்க்கால் மண்ணில் இந்தநூற்றாண்டின்மிகக் கொடூரமான மனித அவலங்கள்நிகழ்த்தப்பட்டன.

பக்கம் 18 >>>

காலைக்கதிர் Kalaikkathir



# நல்லாட்சி அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணை முடிந்தது!

## மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

கொழும்பு, மே 17

மக்கள் அரசுக்கு வழங்கிய மக்கள் ஆணை முடிந்துள்ளமையை எமது மே தினக் கூட்டத்துக்கு வந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வருட மே தினத்துக்கு முன்னர் இந்த அரசு கவிழ்க்கப்படும் என்று மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மஹிந்த அணியின் அடுத்த நகர்வு பற்றித் தமிழ் ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த அரசு எந்தவோர் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவில்லை. மஹிந்த ஆரம்பித்து வைத்த வேலைத் திட்டங்களை மீள அங்குரார்ப்பணம் செய்து புதிய வேலைத் திட்டங்கள் போல் காட்டிக்கொள்கின்றது.

கண்டி அதிவேகப் பாதை நிர்மாணம் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

அரசால் புதிதாகத் தொடங்கப்பட்டதுஎன்றுஎதுவுமில்லை. ஆகக் குறைந்தது ஒரு மலசல கூடத்தையேனும் மக்களுக்கு நிர்மாணித்துக் கொடுக்கவில்லை.

ஆட்சி அமைந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த இரண்டு வருடங்களையும் வெறுமனே கடத்திய அரசு மீதிக் காலத்தையும் அவ்வாறு தான் கடத்தப் போகிறது.

அவ்வாறு நடந்தால் அது நாட்டுக்குப் பெரும் ஆபத்தாக அமைந்துவிடும். இனியும் இந்த ஆட்சி தொடர்வதை அனுமதிக்க முடியாது.

இந்த மே தினக் கூட்டம் அரசுக்கு ஒரு செய்தியைக் கூறியுள்ளது. ஆட்சி அதிகாரத்தைக் கைகளில் வைத்துள்ள இரண்டு கட்சிகளின் மே தினக் கூட்டங்களுக்கு வந்த மக்களின் எண்ணிக்கையை விடவும் எதிர்க்கட்சியான எங்களது கூட்டத்துக்கு வந்த மக்களின் எண்ணிக்கை அதிகம்.

மக்கள் அரசுக்கு வழங்கிய ஆணை முடிந்துள்ளதை எமது மே தினக் கூட்டத்துக்கு வந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பின்னரும் அரசால் தொடர்ந்து பயணிக்க முடியாது. அடுத்த வருட மே தினத்துக்குள் இந்த அரசைக் கவிழ்ப்போம். புது ஆட்சியை உருவாக்குவோம் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்குச் சென்றால் உண்மை நிலை விளங்கும். அத்தோடு அரசின் ஆட்டம் அடங்கிவிடும்.

இந்த அரசு, தாம் தோற்பது நிச்சயம் என்று உணர்ந்துள்ளதால்தான் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றது .-என்றார். (ஐ)

## தாயகத்துக்கு இலங்கை அகதிகள் மேலும் 53 பேர்!

இந்திய முகாம்களில் புகலிடக் கோரிக்கையாளர்களாக இருந்த இலங்கை அகதிகள் மேலும் 53 பேர் எதிர்வரும் 23 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள அகதிகள் முகாம்களில் பல வருடங்களாக இருந்து வந்த இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பவுள்ளனர்.

மேலும், நாடு திரும்பும் இலங்கையர்களுக்கான விமானப் பயணச் சீட்டு மற்றும் உணவு ஆகிய செலவுகளை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## உலக சுகாதார அமைப்பின் நல்லெண்ணத் தூதுவராக அமிதாப்பச்சன் நியமனம்

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான ஹெபடைடிஸ் நோய் தடுப்புத் தொடர்பான உலக சுகாதார அமைப்பின் நல்லெண்ணத் தூதுவராக பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு மும்பாய் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஹெபடைடிஸ் பீ வைரஸ் தொற்றுடன் வாழும் அமிதாப் பச்சன், இலங்கை, இந்தியா உட்பட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளார்.

இதன் மூலம் தென்கிழக்கு ஆசிய பிராந்திய நாடுகளில் ஹெபடைடிஸ் நோய் காரணமாக உயிரிழப்பவர்களின்எண்ணிக்கை மற்றும் நோயால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## உலக சுகாதார நிறுவன உச்சி மாநாட்டில் அமைச்சர் ராஜித



உலக சுகாதார நிறுவனத்தின் 70 ஆவது உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஜெனீவா புறப்படவுள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை ஜெனீவாவில் உலக சுகாதார நிறுவனத்தின் 70 ஆவது உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கும் அமைச்சர் ராஜித சேனாரத்ன அங்கு சிறப்புரையாற்றவுள்ளார். (எ)

## முறையற்ற ரயில்வே கடவைகளை திருத்தி அமைப்பதற்கு தீர்மானம்!

வவுனியா, மே 17

வவுனியா பகுதிகளில் உள்ள முறையற்ற ரயில்வே கடவைகளைத் திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள ரயில்வே கடவைகள் பல சரியான முறையில் இல்லை. இது தொடர்பில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்று முன்தினம் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

குறிப்பாக பூங்காவீதி - வைரவப்புளியங்குளம் கடவை, சிங்கள பிரதேச சபை வீதி- குருமன்காடு கடவை, தாண்டிக்குளம்- திருநாவற்குளம் கடவை உட்பட வவுனியாவில்இருந்துஓமந்தை வரையான ரயில்வே கடவைகள் ஒழுங்கான முறையில் நிர்மாணிக்கப்படவில்லை.

தண்டவாளம் வீதிக்கு மேலாகத் தெரிகின்றன என்றும் இதனால் பயணிக்கும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் இதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்றுக் கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, இது தொடர்பில் ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகள் அந்தந்த இடங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டு அதனை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பர் என்று உறுதியளித்தனர். (ஐ-100)

## வடக்கில் 120 வீடுகளை அமைக்க முன்வந்தார் அபுதாபி வர்த்தகர்

வட மாகாணத்தில் போரால் இடம்பெயர்ந்த மக்களுக்காக 120 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வர்த்தகர் விருப்பம் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அபுதாபி நகரின் வர்த்தகரான மஹமுத்டே ஹலி அப்துல்லா அல்கஜே என்ற பிரதான வர்த்தகர் ஒருவர் இதற்காக முன்வந்துள்ளார்.

இது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக மூவர் அடங்கிய குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடன் இணைந்து மன்னார் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களை, அந்தக் குழுவினர் சந்தித்த பின்னர் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

இதேவேளை இன,மத, பேதம் இன்றி வீடுகள் நிர்மாணிப்பது தொடர்பில் அபுதாபி வர்த்தகருக்கு அமைச்சர் ரிஷாத் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்காக குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## மாத்தளன் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு



முல்லைத்தீவு, மே 17

இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற மாத்தளன் பகுதியில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்த காலத்துக்கு முன்னர் நல்ல நீராக இருந்த கிணறுகளும் தற்போது உப்புநீராக மாறியுள்ளன என்றும் இதனால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாலை வேளையில் இராணுவத்தினர் பவுஸர் மூலம் கொண்டு வந்து தரும் நீர் போதியதாக இல்லை எனவும் தமக்கு குடிதண்ணீர் வசதியை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ-81)

## தனியார் கல்வி நிலையங்களுக்கு நேரக் கட்டுப்பாடு

### அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, மே 17

வவுனியாவில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாலை 6 மணிக்குப் பின்னரும் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன என்று வட மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன்இந்தக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதன்காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார்.

கல்வி நிலையங்களுக்கு சில நேரக் கட்டுப்பாடுகளை முன்வைக்க வேண்டும் எனவும், ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கி மாணவர்கள் ஒரு நாளாவது வீட்டில் இருக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய இணைத் தலைவர்களான வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் அதனை வட மாகாண கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதற்கு பதிலளித்த வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாணத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றமை தொடர்பில் ஏற்கனவே சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் அந்த நடைமுறை இங்கு பின்பற்றப்படவில்லை என்கிறீர்கள். அதனால் அதனை மீள அனைத்து பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அனுப்பி நடைமுறைப்படுத்துமாறு தெரிவிக்கின்றோம்.

மீறும் தனியார் கல்வி நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார்.

இதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் ஏற்றுக் கொண்டது. (ஐ-100)

# தோப்பூரில் நேற்றிரவு பதற்றம்; முஸ்லிம் மக்கள் வெளியேற்றம்

## பொலிஸ், விசேட அதிரடிப்படை குவிப்பு

திருகோணமலை, தோப்பூர் - நீணாக்கேணி பகுதியில் வசித்த முஸ்லிம் மக்கள் நேற்றிரவு அங்கிருந்து வெளியேற்றப் பட்டனர் எனதெரியவருகின்றது. சிங்களவர்களின் அச்சுறுத்தல் காரணமாகவே அவர்கள் வெளியேற்றப்பட்டனர் எனவும் கூறப்படுகின்றது.

அங்கு ஏற்பட்ட பதற்றமான சூழலை அடுத்து நிலைமையக் கட்டுப்படுத்த மூதூர், சேருநுவர மற்றும் சம்பூர் பொலிஸ் நிலையங்களில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அதைவிட விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டனர்.

நேற்று மாலை அந்த மக்களின் கிராமத்திற்குள் திடீரெனப் புகுந்த சிலர் அவர்களின் வீடுகள் மற்றும் பொருட்களை அடித்து உடைத்துச் சேதமாக்கினர். அதன்போது முஸ்லிம் மக்கள்மீதுதாக்குதல்கள் இடம்பெற்றன எனவும் கூறப்படுகின்றது.

முஸ்லிம் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர்கள் அச்சுறுத்தினர் எனத் தெரியவருகின்றது. இதையடுத்தே அந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுப் பகல் அங்குள்ள முஸ்லிம்மக்களின்காணிகளை பிக்கு தலைமையிலான குழுவின் ஆக்கிரமிக்க முயன்றனர். அதனால் இரு தரப்பினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அங்கு சென்ற பொலிஸாரால் நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே நேற்று மாலை அந்த மக்களின் குடியிருப்புக்களும் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டு மக்கள் வெளியேற்றப்பட்டனர். அங்கிருந்து வெளியேறிய மக்கள் தோப்பூர் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர். (மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்) (ம)

# நிகழ்வுகளை நடத்துவதுடன் நின்றுவிடாமல் உறவுகளை ஆற்றுப்படுத்த உறுதியெடுப்போம்

## அகில இலங்கை சைவ மகா சபை கோரிக்கை

திருகோணமலை, மே 17

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான எதிர்வரும் 18 ஆம் திகதிவெறுமனேநிகழ்வுகளுக்கு அப்பால் இறை பிரார்த்தனைகளை மேற்கொள்வதுடன் துயர் சுமந்த் உறவுகளை ஆற்றுப் படுத்துமாறு அகில இலங்கை சைவ மகா சபையின் பெருந் தலைவர் தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் :-

தாங்கொணா வலி சுமந்து போரின் வடுக்களைத் தாங்கி வாழ்கின்ற உடன் பிறப்புக்களுக்கு எங்களால் ஆன வழிகளில் உதவி செய்வோம் என அன்றையதினம்உறுதியெடுக்க வேண்டும். அந்த உறுதியின்படி செயற்பட முன் வர வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான எதிர்வரும் 18 ஆம் திகதி சைவ மகா சபையின் ஏற்பாட்டில்வடக்கேகீரிமலையிலும் கிழக்கே கன்னியாய் வெந்நீர் ஊற்றிலும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனைகள் இடம் பெறும்.

மேலும், அன்றைய தினம் சைவ ஆலயங்களில் விசேட ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். - என்று தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மட்டக்களப்பில் இடம்பெற்றது



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஐந்தாம் நாள் நிகழ்வு நேற்று மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது.

இறுதி யுத்ததின்போது கொல்லப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்து வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவேநேற்று மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தலைமையில் நினைவேந்தல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு, கிழக்கு மாகாணசபைகளின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக் கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். (ம)

# இன்றும் நாளையும் யாழில் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 17

யாழ். மாவட்ட இராணுவப் படைத் தலைமைச் செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை 'பனங்காட்டில் புத்தி கூர்மை' என்ற கண்டுபிடிப்பு கண்காட்சி இடம் பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து இராணுவப் படைத் தளங்களினதும் புதிய கண்டுபிடிப்புப்பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இதைப் பொதுமக்கள் பார்வையிட முடியும் எனப் படைத்தரப்பு அறிவித்துள்ளது. (ம-21)

# தந்தை நேற்று மரணம்

# மகஸீன் சிறையில் உள்ள மகன் மரணச் சடங்கிற்கு யாழ். வருவார்

யாழ்ப்பாணம், மே 17

மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தந்தை உயிரிழந்த நிலையில், அவரது இறுதிக் கிரியைகளில் மகன் கலந்துகொள்ள ஏற்பாடுகளைச்செய்துதருமாறு அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்படி தமிழ் அரசியல் கைதியை அழைத்து வருவதற்கானஏற்பாடுகளில்ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த விக்னேஸ்வரன் பார்த்தீபன் என்பவர் மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. கடந்த 21 வருடங்களாக அவர் சிறையில்தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவரது தந்தையான விக்னேஸ்வரன் நேற்று உயிரிழந்தார். அவரது இறுதிக்கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளன. இறுதிக் கிரியைகளில் மகனைக் கலந்துகொள்ளச் செய்வதற்கு குடும்பத்தினர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதனுடன் செல்வம் அடைக்கலநாதன்எம்.பிதொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

அதற்கு இணங்க குறித்த அரசியல் கைதியை இன்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது. (ம-100)

# பாராட்டு விழா

இலங்கைதிறந்த பல்கலைக் கழகக் கல்விப் பீடத்தின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் தமிழ்மொழி மூல இணைப்பாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றிய சு.செ. சருக்டீன் அவர்களின் சேவையைப் பாராட்டி மகிழும் விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக் கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்ப் பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவரிடம் கற்ற மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளை இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கை திறந்த பல் கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்தியநிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

# வண. பிதா எழில் பொலிஸ் விசாரணையில்!

முல்லைத்தீவு, மே 17

இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உயிரிழந்த ஐநூறு பொதுமக்களின் நினைவாக நினைவுக் கல் நடும் நடவடிக்கையை முன்னெடுத்த வண. பிதா எழில் நேற்றிரவு முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் எனத் தெரியவந்தது.

முள்ளிவாய்க்காலின் கிழக்குப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் இந்த நினைவுக்கற்களை நிறுவுவதற்கான அமைப்பு வேலைகள் இடம்பெற்று வந்த நிலையிலேயே வண. பிதா எழில் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளின் பெயர்களும் அந்த நினைவுக் கற்களில் உள்ளனவா என்று கேட்டே அவர் விசாரிக்கப்படுகின்றார் எனத் தெரியவந்தது. (உ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று பொ.ஐ.மு.வுடன் தீர்வு குறித்துப் பேச்சு

கொழும்பு, மே 17

அரசமைப்புச் சீர்திருத்த விடயங்கள் தொடர்பாக அமைச்சர் மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிப் பிரமுகர்கள் நேற்று இரவு ஆளும் கட்சிக் கூட்டமைப் பின் பங்காளிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரமுகர்களோடு உத்தியோகப் பற்றற்ற கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர் என அறியவந்தது.

இந்தக் கலந்துரையாடல் பொதுமக்கள்ஐக்கியமுன்னணியின் செயலாளரின் வீட்டில் இடம்பெற்றிருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல், ஆட்சி முறைமை, தேர்தல் சீர்திருத்தம் ஆகிய மூன்று விடயங்கள் குறித்தும் விளக்கமளித்த மனோகணேசன், இந்த மூன்று ஒருங்கமைந்த அரசமைப்பு மாற்றம்மூலம் மட்டுமே நாட்டின் பிரச்சினைக்குத்தீர்வு காண முடியும் என வலியுறுத்தினார் என்றும் அறியவந்தது. (உ)

# சிவாஜிலிங்கத்தை கைது செய்யுங்கள் சீறுகிறார் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர

யாழ்ப்பாணம், மே 17

விடுதலைப் புலிகளுக்கான நினைவேந்தல் என்ற வார்த்தையைத் தடை செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, புலிகளின் தலைவர் பிரபாகரனின் மைத்துனரான எம்.கே. சிவாஜிலிங்கத்தைக் கைதுசெய்ய வேண்டும் எனவும் கூறினார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தைப் பிரகடனப் படுத்தி, வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் படுகொலைகள் இடம்பெற்ற இடங்களுக்கு நேரடியாகச்சென்று அங்குள்ள மக்கள், அரசியல்பிரமுகர்களை ஒன்றுதிரட்டி நினைவேந்தல் நிகழ்வை நடத்திவருகின்றார்.

இதனால் தென்னிலங்கைத் தரப்புக்கள் அவர் மீது கடும் கொதிப்பில் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன சிவாஜிலிங்கம் தொடர்பாக கடும் கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையில், தற்போது சரத்வீரசேகரவும் அவரை விமர்சித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நீதியை...

(பதினொட்டம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைக்கான பொறுப்புக் கூறலிற்குரிய குரலையும், இனப்படுகொலைக்கான நீதிக்கான சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணைப் பொறிமுறையொன்றையும் எந்த விதமாயைகளுக்குள்ளும் உட்படாது நேர்மையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் ஒற்றுமையாய் முன்னெடுத்தலும் எமது அரசியல் கோரிக்கைகளில் தெளிவுடனும் உறுதியுடனும் இருத்தலுமே இன்று எம் முன் உள்ள கட்டாய கடமைகளாகும்.

உண்மையில் இதுவே வீழ்த்தப்பட்ட எமது உறவுகளிற்கு நாம் செய்யும் நேர்மையான அஞ்சலியாகவும் அமையும்.

நீதிக்கானமக்களின் குரலை வன்முறைமூலம் அடக்கிவிடலாம்என்பது அடிப்படைப் புரிதல் அற்ற, வன்மம் மிகுந்த செயன்முறையாகும்.

மறுக்கப்பட்ட நீதியை வழங்குவது மட்டுமே அந்த மக்களின் குரலை அமைதிப்படுத்துமே தவிர வரலாறுகளை மாற்றுவதும் சலுகைகள் மூலம் நீதிக்கான குரல்களை ஒளித்து வைக்க முயல்வதும் அல்ல.

ஆனால் இலங்கை அரசா எதுதொடர்ச்சியாக இப்படியான ஏமாற்றும் செயன்முறைகளிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறது.

நல்லாட்சி எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் இந்த அரசாங்கமும் அதேஏமாற்றுவழி முறையையே துணைசெல்நெறியாக வரித்துக்கொண்டுள்ளது.

இப்படியான மனோநிலை தொடர்ந்தும் இருக்கும் வரையில் இலங்கைஅரசாங்கம் சர்வதேசத் தலையீடு இல்லாத வரைக்கும் எமக்கான நீதியைத் தானே முன்வந்து வழங்கும் என நாம் ஒருபோதும் எதிர் பார்க்கமுடியாது .

எனவே இந்த வரலாற்று யதார்த்தத்தையும் உண்மையான கள நிலவரத்தையும் புரிந்து கொண்டு சர்வதேச சமூகம் எமது பிரச்சினையை நேர்மையுடன் அணுக வேண்டும் எனவும் நாம் மீளவும் வலியுறுத்துகிறோம்.

இறுதியாக எமது கோரிக்கைகளில் தெளிவுடனும் உறுதியுடனும் இருப்போம் எனவும் எம்மிடையேயான பேதங்கள் அனைத்தையும் இந்த இழப்புகளின் பெயரால் தாண்டி எமது இனத்தின் நீண்டகால நலனை மட்டும் முன்னிறுத்தி நடப்போம் எனவும் இந்த மண்ணில் வீழ்த்தப்பட்ட எம் உறவுகளின் நினைவுகள்மீது உறுதியெடுத்துக் கொள்வோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதியான விசாரணைக்குத் தயாரா?

**எண்ணிக்கையில் சிறுபான்மையினராகவுள்ள தமிழர்கள்** மீதான - தமிழ்த் தேசிய இனத்தின் மீதான - தனது மேலாதிக்க சிந்தனையிலிருந்து தென்னிலங்கை பேரினவாதம் விடுபடப் போவதில்லை, விடுபடமாட்டாது என்பதைக் கோடிகாட்டி உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கின்றது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனாவின் கருத்து.

எத்தகைய மேலாதிக்கச் சிந்தனையோடு - எத்தகைய இனத் திமிரோடு - கொடூர யுத்தத்தை இலங்கைத் தமிழினம் மீது ராஜபக்ஷ சகோதரர்கள் ஏவிவிட்டார்களோ, அதே திமிரோடும், தடிப்போடும், மமதையோடும் தான் சிங்கள இனவாதத் தலைமை இன்னும் இருக்கின்றது என்பதையே தமது உரையின் மூலம் உறுதிப்படுத்துகின்றார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனா.

முள்ளிவாய்க்காலுடன் முற்றுப் பெற்ற மிக மோசமான - கொடூரமான - குரூரமான - போர் குறித்து வடக்கு மாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன் கூறிய விடயங்களை அவரின் வார்த்தைகளிலேயே நோக்குவது இங்கு மிகவும் பொருத்தமானது.

*"சாட்சியில்லாமல் நடத்தப்பட்ட சமரே முள்ளிவாய்க்கால். வெளியாரின் உள்ளீடுகள் தடுக்கப்பட்டு, ஊடக உள்நுழைவு மறுக்கப்பட்டு, போர் நடைமுறைக்கு முரண்பட்ட விதத்தில் பேராயுதங்கள் பாவிக்கப்பட்டு, கரவாக மக்களை அழித்தொழித்த சமரே முள்ளிவாய்க்கால். அப்பாவிப் பெண்கள், பிள்ளைகள், குழந்தைகள், வயோதிபர்களின் உயிர்களைக் காவிச் சென்றதே முள்ளிவாய்க்கால். வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் சரித்திரத்தில் மாறா இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப் பதிவே முள்ளிவாய்க்கால்."* - இவ்வாறு முதல்வர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டுகின்றமை முழுக்க முழுக்க உண்மை.

பல்லாயிரக் கணக்கில் தங்களின் உறவுகள் அநியாயமாகக் கொன்றொழிக்கப்பட்ட வெஞ்சினத்தில் துடித்து நிற்கின்றது தமிழினம். அந்த வெஞ்சினத்தை - தாளாத சோகத்தை - சீண்டிப் பார்க்கின்றார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

சிவாஜிலிங்கம் ஐவருடன் நின்று விளக்கேற்றி இராணுவத்தினரை விமர்சிப்பதால் தாம் கவலையடைகிறார் எனக் கூறியுள்ள அமைச்சர், பொறுப்புடன் செயற்படும் முப்படையினருக்கு எதிர்ப்பை வெளியிட அனுமதிக்க முடியாது என்ற சாரப்படவும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

வடக்கு முதல்வர் கூறியபடி, சாட்சியில்லாமல், சர்வதேச தொண்டர் அமைப்புகள் உட்பட சகல வெளியாரின் உள்ளீடுகளும் தடுக்கப்பட்டு, ஊடக உள்நுழைவு மறுக்கப்பட்டு, போர் நடைமுறைகளுக்கு மாறாக பேராயுதங்களைப் பயன்படுத்தி, அப்பாவி மக்களைக் கொன்றொழித்த திமிரில் சாட்சியங்கள் ஏதும் இல்லை எனக் கருதி சிங்களத் தலைமைகள் தொடர்ந்து இறுமாப்போடு இருக்கின்றன போலும்.

நடுநிலையான, பக்கச்சார்பற்ற, நியாயமான ஒரு நீதி விசாரணையை நடத்தாமல் - நடத்துவதற்கு மறுத்துவிட்டு - பாராட்ட வேண்டிய அளவிற்கு மிகுந்த பொறுப்புடன் இராணுவம் செயற்பட்டுள்ளது என்ற சாரப்பட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுகின்றமையைப் பார்த்தால், இந்த யுத்தக் குரூரங்கள் - கொடூரங்கள் குறித்து கண்கண்ட பல சாட்சியங்கள், ஆதாரங்கள், ஆவணங்கள், காணொலிகள், செய்மதிப் படத் தொகுப்புகள் எல்லாம் தாராளமாக இருக்கின்றமை அவருக்குத் தெரியாது போலும்.

யுத்தக் குற்றங்கள், மிக மோசமான மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் முள்ளிவாய்க்கால் வரைக் கொடூரமாக அரங்கேறின என்பதை சர்வதேசமே அறிந்துகொண்டு, அவை குறித்து நீதி, நியாயமான விசாரணை நடத்துமாறு கோரியிருக்கின்றது.

அதைச் செய்ய மறுத்துக் கொண்டு, 'பொறுப்புடன் செயற்படும்' படையினருக்கு எதிர்ப்பை வெளியிட அனுமதிக்க முடியாது என்று மிரட்டும் பாணியில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கருத்து வெளியிடுகின்றமை ஏற்புடையதன்று.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தமையால் முப்படைகளும் இலங்கை அரசுக்குப் பெரிதாக - அளப்பரும் - பணியாற்றிய கட்டமைப்பாக இருக்கலாம். ஆனால், அதற்காகப் பல்லாயிரக் கணக்கில் அப்பாவியினரைக் கொன்றொழித்த கொடூரத்தை மூடி மறைத்து விடமுடியாது. அதற்கு நியாயம் கேட்கும் செயல்களைத் தட்டிக்கேட்டு தவறு என்று கூறமுடியாது.

இராணுவத்திரும், ஏனைய படையினரும் பொறுப்புடன் செயற்பட்டனரா, இல்லை அப்பாவி மக்களைப் பல்லாயிரக் கணக்கில் கொன்றொழித்தனரா என்பதை நீதி, நியாயமான, பக்கச் சார்பற்ற விசாரணைகளே அம்பலப்படுத்தும். கொடூரம் இழைத்த இராணுவத்தை வைகின்றார் சிவாஜிலிங்கம். அதைத் தவறு என்று கூறி, இராணுவத்துக்கு நற்சான்றிதழ் வழங்கும் அமைச்சர் ருவான் விஜேவர்த்தன பக்கச் சார்பற்ற விசாரணைக்கு தமது அரசை இணங்கப் பண்ணுவாரா? அதற்கு அவருக்குத் திராணி உண்டா?

அதைவிடுத்து, நடந்த கொடூரங்களை - மனித குலத்துக்கு - எதிரான குற்றங்களை - யுத்தக் குற்ற மீறல்களை - மூடி மறைப்பது அந்தக் குற்றங்களைச் செய்த செயலுக்கு ஒப்பாகும்.

யுத்தக் குற்றங்களை மூடி மறைத்துக்கொண்டு, அவை பற்றி விசாரித்து, உண்மையைக் கண்டறிந்து அம்பலப்படுத்தாமல் நீதி நிலைநாட்டப்படமாட்டாது; நல்லிணக்கமும் ஏற்படாது; நிரந்தர அமைதியும் கிட்டாது; சமாதானத் தீர்வும் வராது.

# இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் உதவியைப் பெற்று தீர்வு காணும் சூழல்

## தோற்றம் பெற்றுள்ளது என்கிறார் டிலான்



கொழும்பு, மே 17

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எப்போதும் இல்லாதவாறான நட்புறவு ஏற்பட்டுள்ளது. எனவே, தற்போதைய இந்த சிறந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் உதவியையும் பெற்று நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய தீர்வைப் பெற்றுக்கொள்ள அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம் என்று சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் மற்றும் சந்திப்புக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மோடியின் வருகைக்கு கறுப்புக்கொடி காட்ட வேண்டும் என்று கூறியவர்கள் இறுதியில் வெள்ளைக் கொடியையே காட்டினர்.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளது. இது ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை எமக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவு சிறப்பாக இருக்கவில்லை. ஜெனீவா விவகாரங்களில் இதனைக் கண்டுகொள்ள முடிந்தது.

ஆனால், இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் நிலைமை மாறியது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையில் சிறந்த புரிந்துணர்வும் நட்புறவும் காணப்படுகின்றது.

இந்தியா எப்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சிறப்பான உறவை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் இம்முறை இந்தியப் பிரதமரின் விஜயத்தின் போது பெரியதோர் அத்திபாரம் இடப்பட்டுள்ளது.

இதன்மூலம் எமது நீண்டகால பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கான சாத்தியமும் சூழலும் உருவாகியுள்ளது. எனவே தற்போதைய இந்த சிறந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் உதவியையும் பெற்று நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய தீர்வைப் பெற்றுக்கொள்ள அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியமை அவசியமாகும்.- என்றார்.

# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பற்சிகிச்சை நாற்காலிகள் கொள்வனவு செய்யப்படும்

## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, மே 17

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பற்சிகிச்சைக்கான நாற்காலிகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பற்சிகிச்சை நாற்காலியை ஒத்ததாக உள்ளூர் தயாரிப்பு அமைந்துள்ளது. இந்த நாற்காலிகள் யாழ்ப்பாணம், பலாலி வீதியில் தயாரிக்கப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்படும் ஐரோப்பிய நாற்காலி ஒன்றின் விலை 25 லட்சம் ரூபா. உள்ளூர் தயாரிப்பு நாற்காலியின் விலை 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

இந்தத் தயாரிப்புக்களில் ஈடுபடும் துறையினருக்கு அரசு உதவிகளை வழங்கும்.

இந்த நாற்காலிகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஜயசுந்தர பண்டாரவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தஅமைச்சர் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையில் ரிஸ்சோமேட் நிறுவனத்தால் அதன் உரிமையாளர் ராஜா குலேந்திரனால் தயாரிக்கப்பட்ட இந்த நாற்காலி மற்றும் உபகரணங்களை அமைச்சர் பார்வையிட்டிருந்தார்.

இந்தத் தொழிற்றுறை முயற்சியில் ஈடுபட்டுள்ள குலேந்திரனின் தொழிற்றுறைக்கு உதவி வழங்குவதாக அமைச்சர் இதன் போது கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரணி முருகமூர்த்தி ஆலயத்தில் மூத்த பிரஜைகளுக்குக் கௌரவம்

## சங்காபிஷேக பூர்த்தி நாளில் சிறப்பு நிகழ்வு

வரணி,மே17

வரணிப் பகுதி ஆலயம் ஒன்றின் மண்டலாபிஷேக பூர்த்தி நாளான கடந்த வெள்ளிக்கிழமை சமூக நலத்திட்டம் ஒன்று நடைபெற்றது.

அன்றைய தினம் வழமைக்கு மாறாக முன்பள்ளி மாணவர்களுக்குப் புத்தகப் பைகளும் வயதில் மூத்த பிரஜைகளைக் கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு (பெண்கள் அடங்கலாக) உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

வரணி வடக்கு அருள்மிகு கூழாநின்ற புலப்பதி முருகமூர்த்தி ஆலயத்திலேயே இந்தச் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

முன்மாதிரியான இந்த நிகழ்வுக்கு சமூக சேவையாளர் க.குணரத்தினம் மற்றும் வர்த்தகர் க.மனோகரன் ஆகியோர் நிதியுதவி வழங்கி இருந்தனர்.

இவ்வாலயம் சுமார் நூறாண்டு காலத்துக்கு முன் பிரதேச மக்களால் கட்டப்பட்ட நிலையில் படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போது சகல வசதிகளுடனும் நிர்வாக சபையினர் மற்றும் அடியார்களின் முன் முயற்சியால் சிறப்புடன் செயற்பட்டு வருகிறது. (இ-25)

வருமுன் காப்போம்! மரணம் தவிர்ப்போம்!

உணவு உண்ணும்போது, நாயருகில் செல்லாதீர்கள். குழந்தைகளையும் அதனருகில் செல்ல அனுமதியாதீர்கள்.



விலங்குவிசர் நோயை இல்லாது ஒழிப்போம்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

18.05.2017

வியாழக்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் காலை. 5.57 வரை
திதி : ஸப்தமி பி.ப. 1.41 வரை

சுபநேரம் : 7.23 - 8.53 வரை
இராகுகாலம் : 1.23 - 2.53 வரை

# கூட்டங்களுக்கு வரும் தலைகளை வைத்து தேர்தல் முடிவைத் தீர்மானிக்க முடியாது!

## அனுபவத்தை வெளிப்படுத்துகிறார் மைத்திரி

கொழும்பு, மே 17

அரசியல் கூட்டங்களில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கையை வைத்துத் தேர்தல் பெறுபேறுகள் தொடர்பான தீர்மானத்துக்கு வரமுடியாது.

- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அரலகங்வில மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மஹவலி காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த மே தினக் கூட்டத்துக்கு வந்த நபர்களுடைய தலைகளின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு அரசுக்கு எதிரான பல்வேறு பிரசாரங்களைக் கூட்டு எதிர்க்கட்சியினர் முன்னெடுத்து வருகின்றனர். அடுத்த நாளே அரசைக் கவிழ்க்க முடியும் என்பது போன்ற கதைகளைப் பரப்பி வருகின்றனர்.

நான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டங்களுக்குச் சென்ற போது, என்னுடைய கூட்டத்தைவிடவும் யாருடைய கூட்டத்துக்கு சனக் கூட்டம் அதிகம் காணப்பட்டது என்பது யாவரும் அறிந்திருப்பர். இருப்பினும், யாருடைய வாக்குப் பெட்டி நிரம்பிக் காணப்பட்டது என்பதை நாங்கள் தேர்தல் முடிவுகளின் போது கண்டோம்.

நாட்டு மக்களின் சமூகக் குழுக்கள், சமய பின்னணி, கலாசார நிலைமை, இன ரீதியான பிரச்சினைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே தேர்தல் பெட்டிக்குரிய வாக்குகள் விழுகின்றன.

இதனால், ஒரு கூட்டத்துக்கு ஆள்களை அதிகம் வரவழைத்து அரசைப் பிடிக்கப் பார்க்கிறார்கள் என்றால் அது மிகப் பெரிய நகைச்சுவையாக இருக்கும். -என்றார். (ஐ)



## நகரக் கடைகளில் வேலைவாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்புத் தேடும் இளைஞர்களுக்கு யாழ். நகரத்திலுள்ள வர்த்தகநிலையங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கமுடியும் என்று வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

நகரவர்த்தகநிலையங்களில் சிட்டைலிகிதர்கள், பொருள்கள் பொதி செய்பவர்கள், உதவியாளர்கள், சாரதிகள், காசாளர், கணக்குப்பதியுநர், கணினி இயக்குநர்கள் மற்றும் உதவி முகாமையாளர்கள் போன்ற பணிகளுக்கு ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

இவ்வாறான பணிகளில் சேரவிரும்புவோர் யாழ்.வணிகர் கழகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விவரங்களுக்கு 0212228593 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளது. (இ)

## மஹிந்தவையும் கோட்டாவையும் பாதுகாக்கிறது நல்லாட்சி அரசு!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையும், கோட்டாபய ராஜபக்ஷவையும் பாதுகாத்துக் கொண்டிருப்பது இந்த அரசுதான் என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததும் அவரைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்புகொண்டு 'நாங்கள் வென்றுவிட்டோம். நீங்கள் உடனடியாக ஆட்சியை எம்மிடம் ஒப்படைத்துவிட்டு அலரிமாளிகையை விட்டு வெளியேறுங்கள். உங்களுக்கு நாங்கள் பூரண பாதுகாப்புத் தருகின்றோம்' என்று கூறியிருந்தார்.

அன்று முதல் இந்த அரசு மஹிந்தவையும் கோட்டாபயவையும் பாதுகாக்கிறது.

விடுதலைப்புலிகளுடனான போரை வென்றெடுப்பதற்கு அவர்கள் இருவரும் பங்களிப்பு வழங்கியமையே இதற்குக் காரணம். இதற்காக அவர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டிருப்பார்களாயின் அவர்களுக்குச் சட்டம் தண்டனை வழங்கும். இதில் இருந்து அரசு யாரையும் பாதுகாக்காது. -என்றார். (ஐ)

# பொருளாதாரக் கேந்திர மையமாக இலங்கையை மாற்றுவதே நோக்கம்




அனைத்து நாடுகளுடனும் உறவுகளை வலுப்படுத்தி இந்து சமுத்திரத்தின் பொருளாதாரக் கேந்திரமாக இலங்கையை மாற்றுவதே எமது நோக்கம்.

நல்லாட்சி அரசின் கீழ் அனைத்து மக்களதும் பொருளாதார சமூக வளர்ச்சிக்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனாவின் பீஜிங் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஒரே கரையோரம் - ஒரே பாதை மாநாட்டில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சமகால நல்லாட்சி அரசின் கீழ் இலங்கையின் முக்கிய இரு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. இதன் மூலம் அனைத்து மக்களதும் பொருளாதார சமூக வளர்ச்சிக்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது .

இதற்கு அமைவாக இந்து சமுத்திரத்தைப் பொருளாதாரக் கேந்திரமாக மேம்படுத்துவதில் நாம் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றோம்.

பல தசாப்தங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக பூகோளப் பொருளாதாரம் மீண்டும் ஆசியாவை கேந்திரப்படுத்தியுள்ளது .

அமைதியான - இராணுவத் தொடர்பற்ற உறவை வளர்த்துக் கொள்வதும் தடைகளின்றி பல்துறை வர்த்தகம் மற்றும் வாணிப நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதை உறுதிப்படுத்தவும் இது பெரிதும் உதவும்.

இந்து சமுத்திரத்தின் நிரந்தர சமாதானமும் நிலையான தன்மையும் இதற்குச் சாதகமாக அமைந்துள்ளன.

பிராந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் அடித்தளமாக இந்து சமுத்திரத்தின் சுதந்திரக் கப்பல் பயணம் அமைந்துள்ளது.

ஒரே கரையோரம் ஒரே பாதை என்ற தொனிப் பொருளின் மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

புராதன கடல்வழிப் பாதையுடன் தொடர்புடைய நாடுகளில் பாதுகாக்கப்பட்டு வரும் தொல்பொருள்கள் தொடர்பாக டிஜிட்டல் தகவல்களை திரட்டுதல், பௌத்த கலாசாரத் தொடர்புகளை உறுதிசெய்தல், பிரஜைகளை வலுவூட்டும்போது பெண்கள் மற்றும் இளைய தலைமுறையினர் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல் என்பன குறித்து கவனம் செலுத்தப்படும். -என்றார். (ஐ)

# மஹிந்த அணியின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு எதுவும் வழங்கப்படாது!

## வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சியான ஐ.தே.க. சீற்றம்

கொழும்பு, மே 17

வட மத்திய மாகாண சபையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் மஹிந்த அணியான எதிரணிக்கு எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டாது என்று இந்த மாகாண சபையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஆட்சியைக் கவிழ்ப்பது தொடர்பில் பொது எதிரணியினர் எம்முடன் பேச்சு நடத்தவில்லை.

அவ்வாறு நடத்தினாலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படாது என்று வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அனில் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வட மத்தியமாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மஹிந்த அணியிலுள்ள மாகாண சபை உறுப்பினர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர். அவர்களுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவசர சந்திப்பை நடத்தியுள்ளதால் இது விடயம் தொடர்பில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களும் தமக்கு ஆதரவு வழங்குவர் என்று மாகாண சபையிலுள்ள மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் அறிவித்திருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

மஹிந்தவுக்குச் சார்பாக செயற்பட்டு வந்த வட மத்திய மாகாண அமைச்சர் கே.எச்.நந்தசேனவை தூக்கிவிட்டு, அந்தப் பதவிக்கு மாகாண சபை உறுப்பினர் எம். ஹேரத் பண்டாவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் நியமித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதிலடிகொடுக்கும் வகையில் மஹிந்தவுக்குச் சார்பாகச் செயற்பட்டு வந்த அந்த மாகாண சபையின் மற்றுமோர் அமைச்சரான எஸ்.எம்.ரஞ்சித் தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்.

இதனால் வட மத்திய மாகாண சபையின் அரசியல் களம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையிலேயே வட மத்திய மாகாண சபையில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமளிக்கப்படமாட்டாது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வட மத்திய மாகாண சபை அமர்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தோப்பூரில் குடியிருப்புக் காணியை பிக்கு குழுவினர் ஆக்கிரமிக்க முயற்சி!

## அதனால் அங்கு பதற்றம்; பொலிஸ் தலையீட்டை அடுத்து நிலைமை சுமுகத்துக்கு!!

திருகோணமலை, மே 17

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் நீணாக் கேணி பிரதேசத்தில் முஸ்லிம்கள் பூர்வீகமாகப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வசித்து வந்த குடியிருப்புக் காணியை பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் அத்துமீறி கைப்பற்ற முயன்றனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

பொலிஸாரின் தலையீட்டை அடுத்து நிலைமை சுமுகத்துக்கு வந்தது.

பௌத்த மதகுருவும், பௌத்த இளைஞர் குழுவும், இயந்திரங்களின் உதவியோடு,



நேற்று முன்தினம் காலை அந்தக் காணிக்குள் அத்துமீறி நுழைந்தனர். இதனால், பதற்ற நிலைமை ஏற்பட்டது.

காணியின் பாதுகாப்புக்காக, போடப்பட்டிருந்த வேலிகள் இயந்திரங்களால் உடைத்தெறியப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து அங்கு மக்களும் ஒன்று திரண்டனர். இதனால், அந்த இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்தநிலையில், அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார், இந்த விவகாரத்துக்கு, நீதிமன்றத்தை நாடி, தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு சமரசம் செய்தனர். அதனையடுத்தே பதற்ற நிலைமை தணிந்தது.

இதேவேளை, தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த அந்தக் காணியின் உரிமையாளர்கள் 1959 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உரிமை ஆவணத்தை வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## டிப்பர் மோதியதில் உயிரிழந்தது மாடு



கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேருநுவர, கந்தளாய் பிரதான வீதியில் நேற்று முன்தினம் டிப்பர் வாகனம் ஒன்று மோதியதில் மாடு ஒன்று உயிரிழந்தது.

மேலும், கடந்த வாரமும் இவ்வாறு டிப்பர் வாகனத்துடன் மோதி இரண்டு மாடுகள் இறந்துள்ளன என்று பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# அரசியல் நாடகமாடும் கருணாவின் கருத்துக்கு பதிலளிக்கும் அவசியமில்லை

## வியாழேந்திரன் எம்.பி. காட்டம்

அரசியலுக்காக பந்தை மாற்றிக் கொண்டு அரசியல் நாடகமாடும் முன்னாள் பிரதி அமைச்சர் கருணா என்றழைக்கப்படும் வி.முரளிதரனின் கருத்துக்குப் பதில்கூறும் அவசியம் எனக்கில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

வாகரை வடக்கு பிரதேச செயலகத்தில் வாகரை பிரதேச செயலாளர் எஸ்.ராகுலநாயகி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பிரதேச அபிவிருத் திக் குழு அமர்வில் கலந்து கொண்டிருந்த வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அமர்வில் கல்குடா மதுபானத் தொழிற்சாலை தொடர்பாக ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்குடா மதுபான உற்பத்தித் தொழிற்சாலை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மூவரும் இடைநிறுத்தல் பிரேரணை மூலம் அந்தத் தொழிற்சாலையை நிறுத்துவதை விட்டு, ஊடகத்துக்கு தங்களின் அறிக்கை வரவேண்டும் என்பதற்காக பேசுகின்றார்களே தவிர எந்த முன்னேற்றமும் நாடாளுமன்ற மாவட்ட அபிவிருத்திக்குழு தமிழ் உறுப்பினர்களால் முடியவில்லை என்று ஊடகவியலாளர்களால் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

ஊடகவியலாளர்களின் கேள்விக்குத் தொடர்ந்து பதிலளித்த அவர்,

''அரசியலுக்காக ஒருவரிடம் இருக்கும் பந்தை மற்றையவரிடம் மாற்றும் செயற்பாடே கருணாவிடம் உள்ளது. கடந்த காலத்தில் இவரால் கொண்டு வரப்பட்ட விடயங்களின் தகவல்கள் என்னிடமுள்ளன.

''மற்றையவரை குற்றம் சுமத்திவிட்டு அரசியல் காய் நகர்த்தலை செய்கின்றார். கருணாவுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை'' - என்றார். (எ)

## மட்டு. வைத்தியசாலை விசேட சிகிச்சை பிரிவில் திடீர் தீ விபத்து!

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிசுக்களுக்கான விசேட சிகிச்சைப் பிரிவில் உள்ள மின் ஆழியில் நேற்று முன்தினம் நண்பகல் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக இந்தத் தீவிபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது சிசுக்களும், தாய்மார்களுக்கும் எந்தவித ஆபத்துக்களும் இன்றி பாதுகாப்பாக வேறு விடுதிகளுக்கு மாற்றப்பட்டனர் என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (எ)

## கல்லடியில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

மட்டக்களப்பு காத்தான்குடி, கல்லடிக் கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலத்தை நேற்றுக் காலை மீட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்கரையில் காணப்பட்ட அந்தச்சடலம் தொடர்பில் தமக்குப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து, அந்த இடத்துக்குச் சென்று சடலத்தைத் தாம் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குச்சவெளி உப்பளத் திட்டத்தால் சிறுகடல் மீனவர்கள் பாதிப்பு!

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெனார்த்தனன் விசனம்

திருகோணமலை, மே 17

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உப்பளத் திட்டம் ஒன்றால், சிறுகடல் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலை நீடிக்குமானால், பாரம்பரிய கடல்வாழ் உயிரினங்கள் அழிந்து போகும் அபாயம் ஏற்படும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், பலருடைய எதிர்ப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட கும்புறுப்பிட்டி உப்பளத்தால், அப்பகுதிகளிலுள்ள சிறு கடல் மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். இதுதொடர்பாக, பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும், அதனால் கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் எவ்வித பயனும் கிட்டவில்லை.

இந்தத் திட்டத்தால் பாதிக்கப்படும் சிறுகடல் மீனவர்களுக்கு, கொடுவா மீன் வளர்ப்புத் திட்டம் மற்றும் நவீன இறால் வளர்ப்புத் திட்டம் என்பனவற்றை அறிமுகப்படுத்துவதாக ஒப்புதல் வழங்கியிருந்த போதும், இன்றுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.இந்த மீன்வளர்ப்புத் திட்டத்தையும் இன்று இந்த சிறுகடல் மீனவர்கள் எதிர்க்கின்றனர்.

தற்போது, 3 மாதங்களுக்கு மேல் தாம் இயற்கையாகப் பிடித்து வந்த இறால், நண்டுத் தொழிலுக்கும் பாதிப்பு ஏற்படும் விதத்தில், அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடல் நீரேரியில் வெள்ளத்தை விடாது தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலைமையால், கடல் நீரின் உப்பு செறிவாகும் பட்சத்தில், இறால் மற்றும் நண்டு உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். எனவே, இந்தத் தொழிலை நம்பி வாழும் பல நூறு சிறுகடல் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுடைய இந்தப் பிரச்சினை தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எதிர்வரும் குச்சவெளி பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தின்போது, இதற்குரிய தீர்வு கிட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.- என்றுள்ளது.(எ)

# எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள் மாகாண, உள்ளூராட்சித் தேர்தல்கள்!




**ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவிக்கின்றார்**

கொழும்பு, மே 17

இந்த வருடம் ஒகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதங்களில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம் பெறும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சிகள் கூறுவது போல் நாம் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சவில்லை.

தேர்தலை இந்த வருடம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டு இருக்கின்றோம்.

இந்த வருடம் ஒகஸ்ட் அல்லது செப்ரெம்பரில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான 99 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த வருடமே இரண்டு தேர்தல்களும் இடம்பெறும்.

எதிர்க்கட்சிகள் கூறுவது போல் நாம் தோல்வி பயத்தால் தேர்தலை ஒத்திப்போடவில்லை. எமக்கு உறுதியான மக்கள் செல்வாக்கு இருக்கும் போது நாம் ஏன் தேர்தலுக்கு அச்சமடைய வேண்டும்.

இப்போது நாடு அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் வரத் தொடங்கியுள்ளன.

மக்களின் கைகளுக்கு பணம் வரத் தொடங்கியுள்ளது. மஹிந்தவால் சீரழிக்கப்பட்ட இந்த நாட்டை நாம் சீர்படுத்திக் கொண்டு செல்கிறோம்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கும் போது இந்த நாடு அடைந்திருக்கும் அபிவிருத்தியை காணலாம். ஆனால், 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சியைக் கவிழ்க்க மஹிந்த அணி எடுக்கும் முயற்சி ஒரு போதும் வெற்றியளிக்காது.

மஹிந்தவின் ஆட்சியில் ஏற்படவிருந்த மிகப் பெரிய வறுமையை நாம் இல்லாது செய்துள்ளோம். வெளிநாடுகளுடனான உறவை வலுப்படுத்தியுள்ளோம்.

அதனூடாக நாட்டுக்குப் பெரிய நன்மைகள் ஏற்படவுள்ளன. அதற்குச் சிறந்த உதாரணமாகத்தான் எமக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீண்டும் கிடைக்கவுள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## ஆஸ்திரேலிய பாதுகாப்பு உயரதிகாரிகள் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சில் பேச்சு!



கொழும்பு, மே 17

ஆஸ்திரேலியாவின் கூட்டு முகவர் அதிரடிப்படையின் தளபதியான எயர் வைஸ் மார்ஷல் ஸ்டீபன் ஒஸ்போர்ன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுகளை நடத்தியுள்ளார்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கைக் குழுவில் பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜேகுணரத்ன, தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ், கடற்படை நடவடிக்கை பணிப்பாளர் றியர் அட்மிரல் பியல் டி சில்வா, கடலோரக் காவல்படையின் தளபதி றியர் அட்மிரல் சமந்த விமலதுங்க, பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பதிகாரி, பிரிகேடியர் ரணவக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆஸ்திரேலிய குழுவில், எயர் வைஸ் மார்ஷல் ஸ்டீபன் ஒஸ்போனுடன், கடல்சார் எல்லை கட்டளைப் பீடத்தின் பிரதித் தளபதி ஜோ குறூக்ஸ், இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்சிசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, மனித கடத்தல் உள்ளிட்ட நாடு கடந்த குற்றங்களுக்கு எதிராக இரண்டு நாடுகளும் இணைந்து செயற்படுவதை உள்ளடக்கிய இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக விரிவான பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. (க)

## இலங்கைத் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு உதவுவோம் என்று சீன ஜனாதிபதி வாக்குறுதி!



கொழும்பு, மே 17

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை உள்ளிட்ட இலங்கையின் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளுக்கும் சீனா முழுமையான ஆதரவை வழங்கும் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.

பீஜிங்கில் நடைபெறும் 'ஒரு அணை, ஒரு பாதை', உச்சி மாநாட்டின் பக்க நிகழ்வாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போதே, சீன ஜனாதிபதி இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

'சர்வதேசகடல்சார் போக்குவரத்தில் சிறிலங்கா மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. சீனாவின் கடல்சார் பட்டுப் பாதையில் இலங்கை ஒரு முத்தாக இருப்பதால், அதன் துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் துறையின் அபிவிருத்தியை சீனா உறுதிப்படுத்தும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## காலி மாவட்டச் செயலகத்தின் அதிகாரபூர்வ இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்!

கொழும்பு, மே 17

காலி மாவட்டச் செயலகத்தின் அதிகாரபூர்வ இணையத்தளம் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு, முடக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சைபர் நிபுணர் குழு என்ற அமைப்பே இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

காலி மாவட்டச் செயலகத்தின் இணையத்தளத்தினுள் நுழைந்த இணைய ஊடுருவிகள், அதில் பாகிஸ்தான் ஜிந்தாபாத், இஸ்லாம் ஜிந்தாபாத், முஸ்லிம்கள் ஜிந்தாபாத், பாகிஸ்தானிய இராணுவம் ஜிந்தாபாத், பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. ஜிந்தாபாத், காஷ்மீர் விடுதலை, சிரிய விடுதலை, பலஸ்தீன விடுதலை என்று செய்தி ஒன்றைப் பதிவு செய்துள்ளனர்.

உலகெங்கும் 99 நாடுகளின் இணையத்தளங்கள் மீது கடந்தவாரத்தில் ரன்சம்வேர் வைரஸ் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இலங்கையிலும் இத்தகைய தாக்குதல் இடம்பெறலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டது.

எனினும், காலி மாவட்டச் செயலக இணையத்தளம் மீதான சைபர் தாக்குதலுக்கும், ரன்சம்வேர் வைரஸ் தாக்குதலுக்கும் தொடர்பு இல்லை என்றும் இலங்கையின் கணினி அவசர நடவடிக்கை குழுவின் தலைமை தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சைபர் தாக்குதல் நடத்தப்பட்ட காலி மாவட்டச் செயலக இணையத்தளம் மீட்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்ந்தும் முடக்கப்பட்ட நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## பௌத்த மகாநாயக்க தேரர்களின் ராஜதந்திர கடவுச்சீட்டு இடைநிறுத்தம்!

கொழும்பு, மே 17

நாட்டின் பௌத்த மகாநாயக்க தேரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இராஜதந்திரக் கடவுச்சீட்டுக்கள் இடைநிறுத்தப்பட உள்ளன.

அரசால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கண்டி அஸ்கிரிய, மல்வத்து, ராமன்ய மற்றும் அமரபுர பீடங்களின் மகாநாயக்க தேரர்களைத் தவிர்ந்த ஏனைய பௌத்த மகாநாயக்க தேரர்களின் வெளிநாட்டு இராஜதந்திரக் கடவுச்சீட்டுக்கள் இடை நிறுத்தப்பட உள்ளன.

வெளிநாட்டு இராஜதந்திரக் கடவுச்சீட்டுஇடைநிறுத்தப்பட உள்ள மகாநாயக்க தேரர்கள் தொடர்பிலான பட்டியல் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

## சுற்றுலா வலயமாக 'அபடீன்' நீர்வீழ்ச்சி

இயற்கை அழகு கொண்ட 'அபடீன்' நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டம், ஹினிகதென பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த 'அபடீன்' நீர்வீழ்ச்சி ஊடாக 'காசல்ரீ' நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கப்படுகின்றது.

இது 320 அடி உயரத்தைக் கொண்டது. இந்த நீர் வீழ்ச்சிக்கு அருகில் மேலும் சிறிய 3 நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. நாளாந்தம் இதனைப் பார்ப்பதற்காக அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த வண்ணம் உள்ளனர்.

இதன் காரணமாக இந்தப் பகுதியைச் சுற்றுலா வலயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தினசரி ராசி பலன் 17.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 3 ஆம் நாள் சஷ்டி பிற்பகல் 1.13 மணி வரை. பின்னர் திருவோணம் பின் இரவு 4.37 மணி வரை. சித்தம் முழுவதும் இராகு காலம் 11.53 மணி முதல் 1.23 மணி வரை. சுபநேரம் 4.23 மணி முதல் 5.53 மணி வரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்யோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**ரிஷபம்:** உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை வந்து போகும். பிற்பகல் முதல் சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். எதிர்பாராத உதவி கிட்டும்.

**மிதுனம்:** குடும்பத்தினர் சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வார்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களுடன் போராட வேண்டிவரும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கடகம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். கல்யாணப் பேச்சுகள் சாதகமாக முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** எதிர்பாராத பண வரவு உண்டு. உறவினர்கள், நண்பர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாள்களைத் தேடுவீர்கள். உத்யோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கன்னி:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:** நட்பு வட்டம் விரியும். அரச அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும்.

**விருச்சிகம்:** கம்பீரமாகப் பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். சொத்துப் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும். வாகன வசதி பெருகும். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். எதிர்பார்த்த பணம் வரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார்.

**மகரம்:** யாருக்கும் பணம், நகை வாங்கிக் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும்.

**மீனம்:** சவாலான விடயங்களைச் சாமர்த்தியமாக முடிப்பீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடனை வசூல் செய்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

# சரணாலயங்களில் அத்துமீறுவோர் தொடர்பில் விசாரணை செய்யக் குழு

கொழும்பு, மே 17

சரணாலயங்களில் அனுமதியின்றி குடியேறுவோர் மற்றும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவோர் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்பொருட்டு அமைச்சரவைஅனுமதிபெறப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. எஸ் .கே. பத்திரத்ன கூறினார்.

சரணாலயங்களில் ஏற்கனவே குடியேறியுள்ளவர்கள் மற்றும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் இதன்போது மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# 10 லட்சத்துக்கும் அதிகமான பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்பு!

## யாத்திரையின்போது வீசப்பட்டவை

கொழும்பு, மே 17

சிவனொளிபாதமலை யாத்திரை இடம்பெற்ற கடந்த 6 மாத காலப் பகுதியில் சுமார் 10 லட்சத்துக்கு மேற்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் அம்பேகமுவ பிரதேச சபையால் சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்த முறை சிவனொளிபாத மலை யாத்திரை இடம்பெற்ற கடந்த 6 மாத காலப் பகுதியில் நல்லதண்ணி சிவனொளிபாதத்துக்கான பாதையினூடக யாத்திரையில் ஈடுபட்ட லட்சக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு யாத்திரிகர்களால் போடப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று நல்லதண்ணி பகுதியில் உள்ள கழிவுப் பொருள்களை சேகரிக்கும் மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ. ஹமந்த தெரிவித்துள்ளார். (ஐ)

# நேபாள ஜனாதிபதி களனி விகாரைக்கு விஜயம்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நேபாள ஜனாதிபதி பிந்தியா தேவி பண்டாரி களனி ரஜமகா விகாரைக்கு விஜயம் செய்திருந்தார்.

அங்கு அவரைச் சங்கைக்குரிய பேராசிரியர் கொள்ளுப் பிட்டியே மஹிந்த சங்ஹறக்கித தேரர் வரவேற்றார்.

நேபாள ஜனாதிபதியுடன் அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, தலதா அத்துக்கோரள உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# தமிழ் மொழிப் பாடங்கள் ஊடாக உரிய இலக்கை எட்ட முடிவதில்லை!

## மாணவர்களிடையே ஆர்வம் குறைய இதுவே காரணம் என்கிறார் அருந்தவபாலன்



தமிழ் பாடப் புத்தகங்களில் காணப்படும் பல குறைபாடுகள் காரணமாக மாணவர்கள் தமிழ்ப் பாடத்தை விரும்பிக் கற்கும் ஆர்வம் குறைந்து செல்கிறது என்று தமிழரசுக் கட்சியின் தென்மராட்சிப் பகுதிக்கான அமைப்பாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

வீ.வீ.சாந்தனின் உயர்தர தமிழ் நூல் வெளியீட்டு விழா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

குறைபாடுகள் சரியான திட்டமிடல்கள் மூலம் சீர்செய்யப்பட வேண்டும். தமிழ் மொழிப் பற்றை வளர்க்க வேண்டும்.

எமது பகுதிகளின் கல்வி வீழ்ச்சிக்கு பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. அதற்கு எமது பகுதிகளில் கடந்த முப்பது வருட காலமாக இடம் பெற்ற யுத்தமே முக்கிய காரணமாகும்.

அதனால் ஏற்பட்ட இடம் பெயர்வுகள், கல்வியில் ஆர்வமுள்ள ஒரு சமூகம் எமது நாட்டை விட்டு வெளியேறி சென்றுள்ளமையும் பிரதானமான காரணிகளுள் ஒன்றாகும்.

அதற்காக இப்போது இங்குள்ளவர்கள் கல்வியில் நாட்டமற்றவர்கள் அல்ல எனக் கூறிவிட முடியாது.

சரியான திட்டமிடல்கள் இல்லாத கல்வி முறைமைகளால் கல்வியை கற்று முடித்து வெளியேறி வீதியில் நின்று வேலைக்காகப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைமைகள் தற்போது உருவெடுத்துள்ளன.

இப்படியான நிலைகளால் தான் தற்போது மாணவர்கள் மத்தியில் கல்வி ஆர்வம் குறைந்து வருகின்றது.

தமிழ் மொழிப் பாடத்தில் அதிகமான மாணவர்கள் உரிய இலக்கை எட்ட முடியாத காரணத்தாலும் தமிழ் பாடத்தில் மாணவர்கள்மத்தியில்ஆர்வம்குறைந்து வருகின்றது. தமிழ் பாடப் புத்தகங்களில் காணப்படும் பல்வேறுபட்ட குறைபாடுகளும் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

தமிழ் மொழிப் பாடத்துக்குரிய முறைமைகள் பின்பற்றப்படாது உரிய முறையில் திட்டமிடப் படாத தன்மைகளால் தமிழ் பாடப் புத்தகங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனால்தான் எமது மாணவர்கள் தமிழ் மொழிப் பாடத்தை விருப்பத்துடன் ஆர்வமாகக் கற்று உரிய இலக்கை அடைய முடியாத நிலை காணப்படுகின்றது.

இது சரியான ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இதன் குறைபாடுகள் கண்டறியப்பட்டு சீர் செய்யப்பட வேண்டும். - என்றார்.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். (ஐ)

வழி மூலம் - Forbes
ஆங்கிலத்தில் - Alyssa Ayres
மொழியாக்கம் - நித்தியபாரதி



# சீனாவின் செல்வாக்குக்கு கதவுகளை திறக்கும் அமெ.!

தெற்கு மற்றும் மத்திய ஆசியா மீதான தனது நிர்வாக வேறு இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளிநாடுகளுக்கான உதவித் திட்டத்தைக் குறைப்பதற்கு திட்டமிட்டிருக்கிறார் போல் தெரிகிறது.

காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு திட்டங்களை இலக்கு வைத்தே தனது வரவு-செலவுத் திட்டத்தில் வெளிநாடுகளுக்கான உதவிகளைக் குறைப்பதாக ஆட்சிக்கு வரும்போது ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ஆனால், ஆசியப் பிராந்திய தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் இந்தியாவுடன் ஒத்துழைப்பு போன்ற வேறு சில திட்டங்களையும் அமெரிக்காவின் தற்போதைய நிர்வாகம் முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய வரவு - செலவுத் திட்டமானது, அபிவிருத்திக்கான உதவி மற்றும் ஐரோப்பா, யுரேசியா, மத்திய ஆசியா போன்ற நாடுகளுக்கான உதவி (AEECA) போன்ற இருவகையான உதவித் திட்டங்களையும் நீக்கவுள்ளது. இவ்விரு உதவித் திட்டங்களுக்கும் பதிலாக அமெரிக்காவின் உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ள நாடுகளுக்கு பொருளாதார ஆதரவு நிதியம் என்னும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாடானது சில அடிப்படை மாற்றங்களைக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வகையில், புதிய வரவு - செலவுத் திட்டத்தில் ESF என்னும் பொருளாதார ஆதரவு நிதியத் திட்டம் புதிதாக உட்சேர்க்கப்படவுள்ளமை, 'ட்ரம்ப் தனது முன்னைய ஆட்சியாளர்களைவிட மிகக் குறுகிய காலத்தில் தனது அரசியல் நோக்குகளை அடைந்து கொள்வதற்காக வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்துவதில் ஆர்வமாக உள்ளார் என்பதையே' சுட்டிக்காட்டுகிறது.

**மத்திய ஆசியா மீதான தாக்கம்**

மத்திய ஆசியாவின் ஐந்து நாடுகள் AEECA என்னும் அமெரிக்கத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றன. ஆனால், அமெரிக்கா தனது வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்தை நீக்கவுள்ள நிலையில், மத்திய ஆசியாவில் இது தாக்கத்தைச் செலுத்தும். AEECA திட்டமானது பனிப் போருக்குப் பின்னான காலப் பகுதியில் கிழக்கு ஐரோப்பா மற்றும் யுரேசியா போன்ற பிராந்தியங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும். உண்மையில் இந்தத் திட்டமானது எதிர்பார்த்த ஆண்டுகளை விட அதிக காலம் நீடித்துள்ளது என்று பூகோள அபிவிருத்திக்கான மையத்தால் 2012இல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான பல்வேறு நிதித் திட்டங்களுடன் அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாட்டை நிர்வகிப்பதென்பது சவாலானதாகும். இந்த நிலையில் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை அமெரிக்கா தனது நிர்வாகத்தை நடத்துவதற்கு இலகுவானதாக இருக்கலாம். இந்தத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரப் போகிறோம் என பராக் ஒபாமாவின் நிர்வாகம் தனது 2013 நிதியாண்டில் பரிந்துரைத்திருந்தது.

ஆனால், இந்தத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதால் என்ன நடக்கும்? கசகஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தானுக்கான உதவித் திட்டம் முடிவுக்குவரும். நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடாக உலக வங்கியால் இனங்காணப்பட்டுள்ள கசகஸ்தான் அமெரிக்காவின் மட்டுப்படுத்தப்பட்ட உதவியான 6 மில்லியன் டொலரை இதுவரை காலமும் பெற்றுக் கொண்டுள்ளது.

இதேபோன்று சர்வாதிகாரத்துவ ஆட்சி நடைபெறும் நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடாக விளங்கும் துர்க்மெனிஸ்தானுக்கு அமெரிக்காவால் 3.9 மில்லியன் டொலர் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நாடானது வட கொரியாவுக்கு அடுத்ததாக உலகின் இரண்டாவது தனிமைப்படுத்தப்பட்ட நாடு என்று அண்மையில் கார்டியன் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அமெரிக்காவின் புதிய நிதியாண்டில் இந்த நாட்டுக்கு இதுவரை வழங்கப்பட்ட உதவித் திட்டமும் நீக்கப்பட்டுள்ளமை துர்க்மெனிஸ்தானுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும். கிர்கிஸ் குடியரசு, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவித் திட்டமானது பொருளாதார ஆதரவு நிதியம் என்னும் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் வழங்கப்படும். உஸ்பெகிஸ்தானுக்கான உதவித் திட்டம் முன்னரை விட சிறிதளவு அதிகரிக்கும்.

**அமெரிக்கா புறந்தள்ளப்படுதல்**

சீனாவின் உதவித் திட்டமானது மத்திய ஆசியா நோக்கி அதிகரித்துவரும் நிலையில் அமெரிக்கா இந்தப் பிராந்தியத்துக்கான தனது நிதியுதவியைக் குறைத்தால் மூலோபாய ரீதியாக அமெரிக்கா பின்தள்ளப்படும். குறிப்பாக சீனாவானது இந்தப் பிராந்தியத்தில் தனது 'ஒரு அணை ஒரு பாதை' என்னும் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மிகத் துரிதமாக பெரும் கட்டுமானத் திட்டங்களை மேற்கொண்டு வருவதைக் காண முடியும்.

சீனா தனது பட்டுப்பாதைத் திட்டத்தின் மூலம் கசகஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளின் ஊடாக புதிய தொடருந்துப் பாதைகளை அமைத்து வருகிறது. அத்துடன் கிர்கிஸ் குடியரசு மற்றும் தஜிகிஸ்தானின் ஊடாக சீனாவுக்கான தரைவழிப் பாதைகளும் அமைக்கப்படுகின்றன. ஆகவே சீனா தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய ஆசிய நாடுகளில் பெரும் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்ளும் நிலையில், அமெரிக்காவின் சிறியளவிலான உதவிகள் இந்த நாடுகளில் புறந்தள்ளப்படும். அத்துடன் இந்த நாடுகளுடனான அமெரிக்காவின் உறவு நிலையும் எப்போதும் சுமுகமாக இருந்ததில்லை என்பதால் இந்த நாடுகளுடனான தொடர்பாடல் அமெரிக்காவுக்குச் சிக்கலை ஏற்படுத்தும்.

**சுகாதாரத் திட்டங்களுக்கு நிதியுதவி குறைக்கப்படல்**

மத்திய ஆசியாவை விட தென்னாசிய நாடுகள் விவசாயம் தொடக்கம் சுகாதாரம் மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி, ஜனநாயகம், ஆட்சி போன்ற பல்வேறு விடயங்களிலும் அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளன. பல பத்தாண்டுகளாக இந்தப் பிராந்திய நாடுகளின் சுகாதாரத் திட்டங்களுக்கு அமெரிக்கா பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

ஆனால், தற்போது அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப் தனது அடுத்தாண்டு



வரவு- செலவுத் திட்டத்தில் இந்த நாடுகளுக்கான சுகாதார உதவித் திட்டங்களை அதிகளவில் குறைத்துள்ளார். அமெரிக்காவின் கடந்தாண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பங்களாதேஷிக்கான சுகாதார நிதியுதவி 79 மில்லியன் டொலராகவும் இந்தியாவுக்கு 53 மில்லியன் டொலராகவும் நேபாளத்துக்கு 41 மில்லியன் டொலராகவும் பாகிஸ்தானுக்கு 22 மில்லியன் டொலராகவும் காணப்பட்டது. ஆனால், ட்ரம்ப் நிர்வாகம் இந்த உதவித் திட்டத்தை சரி அரைவாசியாகக் குறைத்துள்ளது.

இது இந்த நாடுகளில் பல்வேறு எதிர்த்தாக்கங்களை உண்டு பண்ணும். இதனால் இந்த நாடுகளின் சிறுவர் மற்றும் தாய்மார் சுகாதார முன்னேற்றம், போசாக்கின்மை அதிகரிப்பு, காச நோய், எயிட்ஸ் போன்ற தீவிர நோய்களை எதிர்த்து நிற்பதற்கான திறனற்ற நிலை உருவாகும்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய வரவு, செலவுத் திட்டமானது மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உதவிகளை முற்றிலும் முடிவுக்குக் கொண்டு வரும். மாலைதீவு நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடு. இது ஜனநாயக ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. குறிப்பாக இங்கு 100 சதவீதமும் சுனி முஸ்லிம்களே வாழ்கின்றனர். ஆனால் தீவிரவாதம் என்பது இங்கு பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

காலநிலை மாற்றத்துக்கு நிதி வழங்குவதை ட்ரம்ப் நிர்வாகம் முற்றிலும் எதிர்த்துள்ளமை அனைவரும் அறிந்ததே. எனினும், தீவிரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மாலைதீவுக்கு அதன் பாதுகாப்பு மற்றும் சமாதானம் போன்றவற்றுக்காக வழங்கப்பட்ட சிறியளவிலான உதவித் தொகையை ட்ரம்ப் நிர்வாகம் இல்லாமல் செய்தமை, இந்த நிர்வாகத்தால் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கு முரணாகக் காணப்படுகிறது.

நடுத்தர வருமானத்தைக் கொண்டதும் 30 ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தில் இருந்து 2009 இல் மீண்டெழுந்த நாடான இலங்கைக்கு 38 மில்லியன் டொலர் பெறுமதியான அமெரிக்காவின் நிதியுதவியானது நிறுத்தப்படவுள்ளது.

ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லாட்சி, சமாதானம், பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தியே இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகள் இந்திய மாக்கடலில் கேந்திர முக்கியத்துவம்மிக்க மையத்தில் அமைந்துள்ளன.

இந்திய மாக்கடல் முழுவதிலும் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தில் இறங்கியுள்ளது. இந்த நிலையில் இந்திய மாக்கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தைக் கொண்டுள்ள இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரு நாடுகளுடனும் சீனா பல்வேறு பெரும் இராஜதந்திர மற்றும் பொருளாதார பங்களிப்பை வழங்கி வருகின்றது.

**இந்தியாவுடனான ஒத்துழைப்பில் தோல்வியடைதல்**

ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்ட இந்தியாவுக்கு அமெரிக்காவால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தியாவின் சுகாதாரத் திட்டங்களுக்கு அமெரிக்கா நிதியுதவி வழங்கி வந்துள்ளது.

அமெரிக்காவின் 2017 நிதியாண்டில் 76 மில்லியன் டொலர் இந்தியாவின் சுகாதார மேம்பாட்டுக்கு ஒதுக்கப்பட்டது. அமெரிக்காவின் 2012 நிதியாண்டு தொடக்கம் 2013 நிதியாண்டுவரை இந்தியாவுக்கு வழங்கப்பட்ட 100 மில்லியன் டொலர் நிதியுதவி 80 மில்லியன் டொலராகக் குறைக்கப்பட்டது.

தற்போது ட்ரம்ப் நிர்வாகத்தின் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய வரவு - செலவுத் திட்டத்தில் இந்த உதவி முற்றிலும் நிறுத்தப்படவுள்ளது.

இதனால், அமெரிக்காவும் இந்தியாவும் புத்தாக்கங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை மூன்றாம் உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதற்கேற்ற வகையில் இந்தியாவுடனான அமெரிக்காவின் பொருளாதார உதவித் திட்டம் அமெரிக்காவின் கடந்த நிர்வாகத்தால் வரையறுக்கப்பட்டது.

**முன்னுரிமைகளை தவறாகப் பயன்படுத்துதல்**

ட்ரம்பின் புதிய நிர்வாகம் தனது வெளியுறவுக் கோட்பாட்டின் கீழ் பிற நாடுகளுக்கான பொருளாதார உதவிகளைக் குறைப்புச் செய்வதானது இந்த நாடு ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகள் போன்ற விழுமியங்களைக் குறைத்து மதிப்பிடுவதையே சுட்டிக்காட்டுகிறது. அமெரிக்கா இவ்வாறு தனது உதவித் திட்டங்களைக் குறைப்புச் செய்வதன் மூலம் மத்திய ஆசியாவில் சீனாவால் தொடருந்துப் பாதைகள் மற்றும் வீதிகள் அமைக்கப்படுவதன் மூலமும் தென்னாசிய நாடுகளான இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற கேந்திர முக்கியத்துவ அமைவிடத்தைக் கொண்ட நாடுகளில் சீனா தொடர்ந்தும் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்குமான வாய்ப்பு மேலும் அதிகரிக்கப்படுகிறது.

ஆகவே, இதனைத் தடுப்பதற்கு அமெரிக்கா பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி போன்றவற்றில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். இதேபோன்று இந்தியாவுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்களை இல்லாமல் செய்வதன் மூலம் புதிய கண்டுபிடிப்புக்கள். தொடர்பில் இந்தியாவின் வளர்ச்சி எத்தகையது என்பதை அறிவதற்கான வாய்ப்பை அமெரிக்கா இழக்கும்.

அமெரிக்காவின் புதிய நிர்வாகம் இவ்வாறான மாற்றங்களை மேற்கொண்டாலும் கூட, இவை எவையும் ட்ரம்ப் நிர்வாகத்தின் முன்னுரிமைகளுடன் ஒத்துப்போவது போல் தோன்றவில்லை.

காலைக்கதிர்



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 180

பொன்.வேணு கிருஷ்ணா


வடகொரியாவின் எல்லைப் பகுதியில் ரஷ்யா தனது இராணுவத்தை குவித்து வருவதால் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

வடகொரியா அண்மையில் ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டது, ஆனால் அது தோல்வியில் முடிந்தது.

இருந்தபோதிலும் அது தொடர்பான சோதனையை இன்னும் பத்து நாள்களில் முடிக்க வேண்டும் என்று வடகொரியா ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகின.

பல்வேறு நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரிய அணுகுண்டு சோதனையில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

வடகொரியாவின் இந்த செயற்பாடுகளை சீனா கண்டிக்க வேண்டும் என்றும், அப்படிக் கண்டிக்கவில்லை என்றால் அமெரிக்கா சில விபரீதமான முடிவுகளை எடுக்க நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.




இந்த நிலையில் ரஷ்யா தனது இராணுவ வீரர்கள் மற்றும் பீரங்கிகள் போன்றவைகளை வடகொரியாவின் எல்லைப் பகுதியில் நிறுத்தியுள்ளது. அது தொடர்பான வீடியோவும் தற்போது வெளியாகியுள்ளது.

இதே போன்று சீனாவும் அதன் எல்லைப் பகுதியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவ வீரர்களை நிறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கு காரணம் அமெரிக்கா வடகொரியாவின் அணுகுண்டு தொழிற்சாலையில் எந்த நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்று கூறப்பட்டது. அவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டால், ரஷ்யாவுக்கும் பெரிய பாதிப்பு ஏற்படும். ஏனெனில் ரஷ்யாவுக்கும், வடகொரியாவுக்கும் இடையில் 11 மைல் நீள எல்லைதான் உள்ளது.

இதனாலேயே ரஷ்யா எச்சரிக்கையுடன் இருப்பதற்கு இராணுவத்தை எல்லையில் குவித்துள்ளது.

மேலும் அமெரிக்கா மற்றும் வடகொரியாவிற்கு இடையே போர் ஏற்பட்டுவிட்டால், உடனடியாக அங்கிருக்கும் அகதிகள் ரஷ்யாவிற்குள் நுழைவதற்கு வாய்ப்பு உண்டு..

இதன் காரணமாகவும், இராணுவத்தைக் குவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிபர் கிம் ஜோங் உன்னை கொலை செய்ய அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ தீட்டிய சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது என்று வடகொரிய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த நாட்டு அரச ஊடகத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:

ரஷ்யாவில் பணியாற்றி வரும் வடகொரிய இளைஞரை அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவாளிகள் அணுகியுள்ளனர். அவரை மூளைச் சலவை செய்து வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னை இரசாயன ஆயுதம் மூலம் கொலைசெய்யத் திட்டம் தீட்டியுள்ளனர்.

இதற்காக தென்கொரிய அரசு உளவாளிகள், சம்பந்தப்பட்ட நபருக்கு பணம் மற்றும் செயற்கைக்கோள் தொலைபேசியை வழங்கியுள்ளனர். எனினும் சி.ஐ.ஏ.வின் சதித்திட்டத்தை வடகொரியா வெற்றிகரமாக முறியடித்துள்ளது. இவ்வாறு அந்தச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அதிபர் கிம்மை கொலை செய்ய நியமிக்கப்பட்ட நபர் யார் என்ற விவரத்தை வடகொரியா வெளியிடவில்லை. அதேபோல கொலை முயற்சி சதித் திட்டம் எவ்வாறு முறியடிக்கப்பட்டது என்பது குறித்தும் விளக்கம் அளிக்கவில்லை.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் தென்கொரிய அரசு வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டன. வடகொரியா அணு ஆயுதச் சோதனை நடத்த தயாராகி வருவதால் அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுப்போம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்க போர்க்கப்பல்கள், போர் விமானங்கள் தென்கொரியாவில் நிலைநிறுத்தப் பட்டுள்ளன.



கொரிய தீபகற்பத்தை போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில் அதிபர் கிம் ஜோங் உன்னைக் கொலை செய்ய CIA சதித் திட்டம் தீட்டியதாக வடகொரியா குற்றம் சாட்டியிருப்பது பதற்றத்தை பலமடங்கு அதிகரித்துள்ளது.

இதனிடையே, வடகொரியாவின் முக்கிய இராணுவத் தளங்களை அதிபர் கிம் நேற்றுமுன்தினம் நேரில் ஆய்வு செய்தார். அப்போது போருக்கு தயார் நிலையில் இருக்குமாறு மூத்த தளபதிகளை அவர் அறிவுறுத்தினார்.

இராக்கையும் லிபியாவையும் கையாண்டது போல எங்களையும் அவ்வளவு எளிதாகக் கையாண்டுவிடலாம் என அமெரிக்கா நினைக்குமானால் அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முட்டாள்தனமே; இராக்கும் லிபியாவும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பில் துயரகரமாக சிக்கித் தவிக்கும் நிலையை இந்த உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது. இதோ இப்போது, சிரியாவும் தான் தாக்கப்பட்ட பிறகும் உடனடியாக பதிலடி கொடுக்காத நிலையில் தான் இருக்கிறது; எங்களையும் அப்படி நினைத்துவிடாதீர்கள்.

– கொரிய மத்திய செய்தி ஸ்தாபனம் மூலமாக, கொரிய மக்கள் விடுதலை ராணுவத் தளபதியின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டிருக்கும் செய்தி இது. வடகொரியா என அழைக்கப்படும் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பளிச்சென்று விடுத்திருக்கும் எச்சரிக்கை இதுதான். கடந்த ஒருவார காலத்திற்கும் மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியம் போர் வெறியின் உச்சத்திற்கு சென்று தான் நடவடிக்கைத் துவங்கியிருக்கிறது'. சீனாவிற்கு அருகில் இருக்கும் வடகொரியாவையும், ரஷ்யாவுடன் நெருக்கமாக உறவில் இருக்கும் சிரியாவையும் குறிவைத்துத் தனது இராணுவக் கட்டமைப்பை முடுக்கிவிடத் துவங்கி யுள்ளது.

இதன் வெளிப்பாடாக அமெரிக்க வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு அமைச்சரும் அவர்களது செய்தித் தொடர்பாளர்களும் அமெரிக்காவுக்கான ஐ.நா.தூதரும் அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகரும் என டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் அனைத்து அதிகாரிகளும் வடகொரியாவுக்கு எதிராக போர் வெறிக் கூச்சலை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏ.பி.சி. தொலைக்காட்சியில் நடந்த நிகழ்ச்சியின்போது பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் பாதுகாப்பு ஆலோசகர் மெக்மாஸ்டர், ''பொறுமையான சூழ்நிலைமை இனியும் தொடராது'' என்று குறிப்பிட்டார். அத்துடன் அவர் நிற்கவில்லை. ''என்ன செய்யப் போகிறோம் என்பதை அறிவிக்காமலே தான் நினைப்பதை மிகத்துல்லியமாக செய்து முடிப்பதில் ஜனாதிபதி உறுதியுடன் இருக்கிறார்'' என்றும் மெக்மாஸ்டர் கூறினார்.

எந்த நேரத்திலும் வடகொரியா மீது தாக்குதல் நடத்துவதற்கான இராணுவ முற்றுகையை அமெரிக்கா மேற்கொள்கிறது என்பதையே மெக்மாஸ்டரின் இந்த வார்த்தைகள் உணர்த்துகின்றன. இது வடகொரியாவை அச்சுறுத்துவதும் ஆத்திரமூட்டுவதும் ஆகும். இதே காரியத்தைத்தான் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியம் மேற்கொண்டு வருகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியை சார்ந்தவரோ, ஜனநாயகக் கட்சியைச் சார்ந்தவரோ – எவர் வந்தாலும் நிரந்தரமாக வடகொரியா முற்றுகையிடப்பட்டிருக்கிறது என்பதையே ட்ரம்ப்பின் பாதுகாப்பு ஆலோசகரது வார்த்தைகளும் தெளிவுபடுத்துகின்றன.


என்ன செய்யப்போகிறோம் என்பதை எந்தவிதத்திலும் முன்கூட்டியே தெரிவிக்காமல், தான் இலக்கு வைக்கிற நாடுகளை திடீரென தாக்குவது, ஆத்திரமூட்டுவது என்பதை பனிப்போர் காலத்தில் - அதாவது சோவியத் ஒன்றியம் இருந்த காலத்தில் சோவியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் தொடர்ச்சியான மறைமுக மோதல் நிலவிக் கொண்டிருந்த காலத்தில் - அமெரிக்கா இடைவிடாமல் மேற்கொண்டது; இப்போது சோவியத் ஒன்றியம் இல்லாத நிலையில், சோசலிச சீனாவையும் ரஷ்யாவையும் குறிவைத்து அந்த நாடுகளுடனான மிகத்தீவிரமான மறைமுக மோதலை உச்சக்கட்டத்திற்கு கொண்டுசெல்லும் விதமாக அவற்றுக்கு அருகில் உள்ள வடகொரியாவையும், சிரியாவையும் குறிவைத்து ட்ரம்ப் நிர்வாகம் இராணுவ ரீதியாக ஆத்திரமூட்டலை ஏற்படுத்தியிருக்கிறது. (கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடு தலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




148

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

## சமாதானப் பேச்சுகளின் அங்குரார்ப்பணம்

2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி தாய்லாந்தின் தலைநகரான பாங்ஹொக்கில் இருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜொம் தைம் என்ற பட்டினத்தில் அமைந்திருந்த 'அம்பாசிடர் சிற்றி' என்ற பிரபல ஐந்து நட்சத்திர விடுதியை நாம் சென்றடைந்தபோது, உலக ஊடகவியலாளர், இராஜதந்திரிகள், தாய்லாந்து அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படையினராக அங்கு பெருந்திரளானோர் திரண்டு நின்றனர். அமைதி முயற்சி ஒன்றின்மீது அனைத்துலகச் சமூகத்துக்கு இருந்த எதிர்பார்ப்பையும் நல்லெண்ண உணர்வையும் அந்த விடுதியின் வாசலில் குழுமி நின்றோரின் ஆர்வத்திலும் ஆர்ப்பரிப்பிலும் காணக் கூடியதாக இருந்தது.

விடுதியின் வாசலில் எம்மை வரவேற்ற தாய்லாந்தின் பாதுகாப்பு அதிகாரிகள், விடுதியின் நடைகூடம் வழியாக எம்மை அழைத்துச் சென்று ஓய்வறை ஒன்றில் தங்க வைத்தனர். இன்னோர் ஓய்வறையில் சிறிலங்காவின் அரச தரப்புப் பிரதிநிதிகளான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூவ் ஹக்கீம், பெர்னாட் குணத்திலக்க ஆகியோரும் அவர்களது உதவியாளர்களும் தங்கியிருந்தனர். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக என்னோடு எமது இயக்கத்தின் சட்ட ஆலோசகர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், பொருளாதார அபிவிருத்தி நிபுணர் ஜே.மகேஸ்வரன், எமது பேச்சுக் குழுச் செயலாளராக எனது மனைவி அடேல் பாலசிங்கம் ஆகியோர் அங்கிருந்தனர். தேநீர் விருந்துபசாரத்தின் பின்பு, அங்குரார்ப்பணக் கூட்டம் நிகழவிருந்த மண்டபத்துக்கு நாங்களும் சிறிலங்காப் பிரதிநிதிகளும், நோர்வே அனுசரணையாளர்களும் அழைத்துச் செல்லப்பட்டோம். நாம் அங்கு சென்றபோது, பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், தாய்லாந்து அரச அதிகாரிகள் ஆகியோரால் மண்டபமே நிறைந்து வழிந்தது. மண்டப மேடையில், பல வர்ணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த நீள மேசையில் இருதரப்புப் பிரதிநிதிகளும் அக்கம் பக்கமாக அமர்ந்து கொள்ள, நடுநிலையாளராக, நோர்வே உதவி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீசன் நடுவில் உட்கார்ந்தார்.

ஆசியாவின் மிக நீண்ட இன நெருக்கடியிலும் மிகக் கோரமான யுத்தத்திலும் சிக்குண்டு நிற்கும் இரு தேசங்களின் பிரதிநிதிகள், சமாதான இலட்சியத்தை அடைய ஒரு வெளிநாட்டு அரங்கில் ஒன்று கூடியிருக்கின்றமையையும், இருதரப்புத் தலைமைப் பிரதிநிதிகளும் எத்தகைய கருத்தை வெளியிட உள்ளனர் என்பதை அறிந்து கொள்ளவும் அங்கு கூடியிருந்த பத்திரிகையாளரும் இராஜதந்திரிகளும் மிகவும் ஆவலாக இருந்தனர். சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பல தடவைகள் இந்தியாவிலும் இலங்கையிலும் சந்தித்துப் பேசியுள்ளனர். ஆனால், இதுவே முதற் தடவையாக தென்னாசியப் பிராந்தியத்துக்கு அப்பால், தாய்லாந்தில் ஒரு சர்வதேச அரங்கில் இரு தரப்பினரும் சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், இரு தரப்புப் பிரதிநிதிகளையும் அறிமுகம் செய்தார். நீண்டகாலப் பகைவர்களான இரு தரப்பினரையும் ஒரு சமாதான மேடையில் ஒன்று சேர்த்துவைப்பதில் நோர்வேயின் இராஜரீக முனைப்பு வெற்றி கண்டுள்ளதாகக் கூறிய அவர், பேச்சுக்கள் சுமுகமாக முன்னேறத் தனது நல்லாசியைத் தெரிவித்தார்.

இதனையடுத்து, தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலர் ரெச் பூனக், அதிகாரபூர்வமாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து வைத்தார். இரு தரப்புப் பிரதிநிதிகளையும் வரவேற்றுப் பேசிய அவர், சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முன்னேறி, சர்வதேச உலகம் எதிர்பார்ப்பது போன்று, அமைதிக்கும் இன ஒற்றுமைக்கும் வழி கோலும் என நம்பிக்கை தெரிவித்தார்.

சிறிலங்காவின் பேச்சுக்குழுத் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தனது உரையில், அமைதி வழியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமான ரணில் விக்கிரமசிங்க அரசின் கொள்கை நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். இன நெருக்கடி காரணமாக, கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத்தீவு முழுவதும் பேரழிவுகள் ஏற்பட்டன எனக் கூறிய பேராசிரியர் பீரிஸ், இலங்கை வாழ் மக்கள் தமது வாழ்க்கையைச் சீரமைத்து, ஓர் அமைதியான வளமான நீதியான நாடொன்றைக் கட்டியெழுப்பும் வகையில் ஓர் அரிய வரலாற்றுச் சந்தர்ப்பமாக இந்தச் சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இன நெருக்கடியின் தீர்வுக்கு, போரை ஒரு வழிமுறையாகத் தனது அரசு கையாளப் போவதில்லை என உறுதிபடக் கூறிய அவர் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைவரும் பகைமையையும் சந்தேகங்களையும் மறந்து, பேச்சுக்கள் வெற்றிகரமாக முன்னேற்றம் காண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுத்தலைவர் என்ற ரீதியில், அடுத்ததாக நான் உரையாற்றினேன். சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி, தனது நாட்டில் சமரசப் பேச்சுக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்ததற்காக தாய்லாந்து அரசைத் தமிழீழ மக்களின் சார்பில் பாராட்டிய நான், அவர்களது விருந்தோம்பல் பண்பையும் மெச்சினேன். ஆயுதப் போருக்கு ஓய்வு கொடுத்து, அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்தி, இன நெருக்கடியோடு சம்பந்தப்பட்ட இரு பிரதான தரப்பினரான விடுதலைப் புலிகளையும் சிறிலங்கா அரசையும் சமாதான முயற்சியில் ஈடுபடச் செய்வதற்கு நீண்ட காலமாக விடாமுயற்சியில் அயராது உழைத்து அரும் பணியாற்றிய நோர்வே அரசையும், தமிழ் மக்கள் சார்பில் பாராட்டினேன். ஒரு சில நிமிடங்களை மட்டும் கொண்ட வரையறுக்கப்பட்ட கால வரம்புக்குள் உரையாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டமையால் இனப்பிரச்சினை வரலாற்றையும், அதன் ஆழமான பரிமாணங்களையும் என்னால் அங்கு விவரித்துக் கூற முடியவில்லை. தேசிய சுயநிர்ணயத்துக்காக தமிழ் மக்களதும் விடுதலைப் போராட்டம் ஒரு நீண்ட, சிக்கலான வரலாற்றைக் கொண்டது எனக் கூறிய நான், இதில் இருபது ஆண்டு காலத்துக்கு மேலாக ஒரு கொடும் யுத்தத்தை எமது மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது என விளக்கினேன்.






(தொடரும்...)

# ஞானச்செருக்கு மிக்க ராங்கிக்கார 'ஜென்ரில்மன்' எஸ்.டி.சிவநாயகம்



வி.என்.மதியழகன்

-02-

தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் சேர்ந்து கொள்ள நான் சுயாதீன பத்திரிகா சமாஜம் சென்றபோது மேல் மாடியில் வைத்து என்னை நேர்முகப் பரீட்சை செய்தவர் "தவஸ" சிங்கள நாளேட்டின் பிரதம ஆசிரியர்டி. பி. தனபாலா.

விவசாயம் கற்று விட்டு பத்திரிகை நிறுவனத்தில் சேர முற்படும் கற்றுக்குட்டியான என்னை அவர் பத்திரிகைத் துறை பற்றி எதுவும் கேட்டு தொந்தரவு செய்யவில்லை. மாறாக தமிழ், ஆங்கில மொழி அறிவு எந்த அளவில் உள்ளது என்பதை மட்டும் அளவிட்டுக் கொண்டார்.

உதவி ஆசிரியராக உம்மைச் சேர்த்துக்கொள்ளமுடியும். சிவநாயகத்திடம் சொல்லுகிறேன். கீழ் மாடியில் அவரைச் சந்தியும் என்று என்னை அனுப்பி வைத்தார்.

"வாரும் ஐ சே" எனக் கூறி என்னை மேலும், கீழுமாகப் பார்த்து நோட்டமிட்டவாறே பல கேள்விகளைக் கேட்ட பின் சொன்னார் இப்படி -

"உதவி ஆசிரியர் பதவி மிகவும் பொறுப்பானது. அதற்கு நல்ல அனுபவம் வேண்டும். அலுவலக நிருபராக உம்மை சேர்த்துக் கொள்கிறேன். காலப் போக்கில் முன்னேறலாம். இப்போது முதல் அடியை எடுத்து வையும்."

பத்திரிகைத்துறை ஜாம்பவான் என்னைக் கரம்பற்றி ஏற்றிவிட்ட முதற்படி அடிபிசகாமல் பலத்துடன் சில படிகளை பின்னர் கடக்கவைத்தது.

தினபதி - சிந்தாமணி ஆசிரியபீடத்தில் ஒவ்வொருவருக்கும் ஓர் இலக்கம் அல்லது ஓர் எழுத்து அடையாளமாக இருந்தது. எனக்கு தரப்பட்ட இலக்கம் 3. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என மூன்று படிகளை கால வோட்டத்தில் கடந்தேன். பத்திரிகைத்துறை அனுபவம் வானொலியில் கைகொடுத்தது. வானொலியில் பெற்ற அனுபவம் தொலைக்காட்சியில் கைகொடுத்தது. பத்திரிகைத்துறையில் பயத்தைப் போக்கிட பெரிய பொறுப்புக்களைத் தந்து, தவறுகள் நேர்ந்தால் பொறுமைகாட்டி திருத்தி பக்குவப்படுத்திய அவரது பாங்கை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

சிவநாயகத்தின் கீழ் பயிற்சி பெற்ற காலத்தில் பல பயனுள்ளவிடயங்களைகற்றறிந்து கொண்டேன். அவர் சொல்லித் தந்த பிரதானமான நுட்பம் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் மொழியில் உள்ள உயர் இலக்கிய வழக்கு, பேச்சுவழக்கு என்பவற்றைத் தாண்டி மூன்றாவது வழக்கான சமகால இலக்கிய வழக்கைப் பயன்பாட்டு வரையறைக்கு உட் பட்டு பிரயோகிப்பது எவ்வாறு என்ற நுட்பமே அது. வாசிப்போரை, கேட்போரை சுலபமாக அது வசீகரிக்க வைக்கும். செய்திப் பத்திரிகைகளில் பயன்படுத்தப்படவல்ல சமகால வழக்கில், ஏனைய துறைகளின் பயன்பாடுகளில் இல்லாத பல மொழியியல் சிறப்புக்கள் உள்ளன என்பதை அவர் அன்று உணர்த்தி வைத்தார் படிப்படியாக.

தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் பணி செய்து கொண்டிருக்கையிலேயே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தேன். இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் பத்திரிகைத் துறை அனுபவம், இசைத் துறையில் உயர் தகுதி என்பவற்றில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பது நிபந்தனை.

நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்தது. சிவநாயகத்தின் அலுவலகத்தினுள் தயங்கித் தயங்கி பிரவேசித்து அனுபவச் சான்றிதழ் தருமாறு கேட்டேன். கறாராக மறுத்து விட்டார். "இங்கேயே உம்மால் ஒரு பத்திரிகையாளனாக முன்னேற முடியும் - வேறெங்கும் செல்ல வேண்டாம்." என்று கண்டிப்பான தொனியில் கூறினார்.

இராஜினாமாக் கடிதத்தை கொடுத்தே அனுபவச் சான்றிதழை அவரிடமிருந்து பெற நேரிட்டது. என்னை விரும்பும் பத்திரிகைத்துறை வல்லானை விட்டுச் செல்கிறேனே என்ற கவலை என்னை வாட்டி எடுத்தது. பிரிய மனமில்லாமல் அவரது அலுவலக அறையை விட்டு வெளியே வந்தேன்.

வானொலியில், தொலைக் காட்சியில் இடம்பெற்ற எனது நிகழ்ச்சிகளை பின்னாளில் சில சந்தர்ப்பங்களில் அவர் எழுத்தில் கடுமையாக விமர்சனம் செய்ததுண்டு. மனம் விட்டு பாராட்டியதுமுண்டு. நான் தயாரித்து ஒலிபரப்பி வந்த நாடக மேடைப்பாடல்கள் நிகழ்ச்சி மிகவும் உயர்வானது; ரசனைக்குரியது என திரிஞானி கேள்வி - பதில் பகுதியில் அவர் எழுதியிருந்தமை மனதில் வெகுவாகப் பதிந்துள்ளது.

சிவநாயகம் தமது எண்பத்தியிரண்டாவது வயதில் காலமானபோது நான் வெளிநாட்டில் இருந்தமையால் அவருக்கு நிரந்தரப் பிரியாவிடை என்னால் கொடுக்கமுடியாது போய் விட்டது.

இலங்கையில் இன்று ஒரு முன்னணி Freelancer – சுதந்திர ஊடகவியலாளராக விளங்கிவரும் "ஷண்" என்றஎஸ்.சண்முகராசாவும் நானும் தினபதி - சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள். எனக்கு வயதில் மூத்தவர் தற்போது வயது 82. எண்பது வயதை எட்டியபோது வாசகர்கள் ஏழு லட்சம் ரூபா செலவில் அவரது பிறந்த நாளை "அகவையில் எண்பது சேவையில் ஐம்பது" எனக்கூவி வெகு எடுப்பாகக் கொண்டாடி குதூகலம் பெற்றனர். கொழும்பில் தங்கியிருந்து ஊடக எழுத்தை சுயதொழிலாக மேற்கொண்டு வரும் ஷண்ணை நான் தொடர்பு கொண்டபோது, அவரது குருவுமான சிவநாயகத்தின் அருமை, பெருமைகளை அவர் கூறிய விதம் இது - 1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி ரூபவாஹினியின் உத்தியோக பூர்வ ஒளிபரப்பு ஆரம் பமான போது, அன்றைய நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த நான், அந்நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு விமர்சனம் எழுதி ஆசிரியரிடம் கொடுத்தேன். அதை அவர் தனது அத்தாணி மண்டபம் பகுதியிலே பிரசுரித்தார்.

மறுநாள் என்னை அழைத்த ஆசிரியர், அவ்விமர்"சனத்துக்கான பாராட்டைத் தெரிவித்து விட்டு," சினிமாவை விட சக்தி வாய்ந்த ஊடகம் ரெலிவிஷன். சினிமா படங்களை தியேட்டர்களுக்குப் போனால்தான் பார்க்க முடியும். ஆனால் ரெலிவிஷன் நிகழ்ச்சிகளையோ முழுக்குடும்பமுமே வீட்டிலிருந்தபடி பார்க்கலாம்."

"உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், நேரடி நிகழ்ச்சிகள், ரெலி டிராமாக்கள், நாட்டிய நிகழ்ச்சிகள், சங்கீதக் கச்சேரிகள், சினிமாப் படங்கள், பாடல் காட்சிகள் என்று எல்லாவற்றையுமே ரெலிவிஷனில் பார்க்கலாம்.

ஆகவே, சினிமாவுக்கென்று ஒரு பகுதி சிந்தாமணியில் வெளிவருவதுபோல் ரெலிவிஷனுக்கும் ஒரு பகுதி ஆரம்பித்தால் வாசகர்கள் மத்தியில் நல்லவரவேற்பிருக்கும். ஆகவே, அப்படி ஒரு பக்கம் தொடங்குவோமா?"

"அப்படித் தொடங்கினால், அப்பக்கத்தில் தொலைக்காட்சியில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனங்களை எல்லாம் எழுதலாம்" என்று சொல்லி எனது அபிப்பிராயத்தைக் கேட்டார். நானும் அதற்குச் சம்மதம் தெரிவித்தேன். அன்று உதயமானதுதான் இலங்கைப் பத்திரிகை உலகின் முதல் "ஒலி ஒளி"ப் பக்கம். ஒலி என்றால் வானொலி(BROAD CASTING)ஒளி என்றால் ஒளிபரப்பு (TELECASTING) என்பது அதன் அர்த்தமாகும். ஆனால், ஆசிரியரோ அந்த "ஒலி ஒளி"யுடன் "உருவம்" என்ற சொல்லையும் சேர்த்து, அந்தப் பக்கத்துக்கு "ஒலி ஒளி உருவம்" என்று பெயர் சூட்டினார்.

இந்த "ஒலி ஒளி" ஊடகங்களுக்குள் உன்னதமான கலைஞர்களும், ஊடகவியலாளர்களும் உலா வருகின்றார்கள் என்பதை உணர்த்தவே "உருவம்"என்ற சொல்லையும் சேர்த்து அத்தலைப்புக்கு உயிரூட்டினார்.

"ஒலி ஒளி உருவம்" பக்கத்தின் தயாரிப்புப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டமையால், எனது பெயரின் முதலிரு எழுத்துக்களையே புனைபெயராகக் கொண்டு அப்பக்கத்துக்கான ஆக்கங்களை எழுத ஆரம்பித்தேன்.

ஆனால் ஆசிரியரோ, "இன்னொரு நல்ல பெயர் உள்ளது. அதுதான் இந்த ஒலி ஒளி உருவப் பகுதிக்குப் பொருத்தமானது என்று கூறி "சஞ்ஜயன்" என்ற பெயரைச் சூட்டினார். இந்த "சஞ்ஜயன்"என்ற பெயரின் முதல் எழுத்திலும் கடைசி எழுத்திலும் உமது புனைபெயரின் தொனியும் அடக்கம் என்றார்.

"இந்தச் சஞ்ஜயன் யார் என்று தெரியுமா?" என்றும் கேட்டார். "பாரத கதையில் வரும் ஒரு கதாபாத்திரத்தின் பெயர்" என்று கூறினேன்.


"ஆம்! அவர்தான் வியாசரின் சீடர். பாரத குருஷேத்திரப் போர்க் காட்சிகளை தனது ஞானதிருஷ்டியால் பார்த்து, அரண்மனையிலிருந்தபடியே திருதராஷ்டிரனுக்கு நேரடி ஒலி, ஒளிபரப்புச்செய்த ஞானி. அன்றைய புராண காலத்து "புரோட்காஸ்டர் அன்ட் டெலிக்காஸ்டர்" இவர்தான் என்று விளக்கமளித்தார்.

(தொடரும்...)




உ தமிழ்மொழியில் உள்ள உயர் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு என்பவற்றைத் தாண்டி மூன்றாவது வழக்கான சமகால இலக்கிய வழக்கை பயன்பாட்டு வரையறைக்கு உட்பட்டு பிரயோகிப்பது எவ்வாறு என்ற நுட்பமே அது. வாசிப்போரை, கேட்போரை சுலபமாக அது வசீகரிக்க வைக்கும். செய்திப் பத்திரிகைகளில் பயன்படுத்தப்படவல்ல சமகால வழக்கில், ஏனைய துறைகளின் பயன்பாடுகளில் இல்லாத பல மொழியியல் சிறப்புக்கள் உள்ளனஎன்பதை அவர் அன்று உணர்த்தி வைத்தார் படிப்படியாக.

# ஈழத் தமிழர்களின் இன அழிப்பை எடுத்துரைக்கும் மரம் ஜேர்மனியில்





முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவு சுமந்து 2012 ஆண்டு ஜேர்மனி பேர்லின் நகரில் மிகப் பிரசித்திபெற்ற பூங்காவில் பாதுகாப்பான பகுதியில் அவர்களின் அனுமதியுடன் அப்பிள் மரம் நடப்பட்டது. வலிகள் சுமந்த நாள்களில் பேர்லின் வாழ் சில உறவுகள் இந்த மரத்தைப் பார்வையிட்டு வணக்கம் செலுத்தினர்.

இந்தப் பூங்காவுக்குச் செல்லும் பல்லாயிரக் கணக்கான ஜேர்மனிய மக்கள் தமிழர்களின் இனப் படுகொலை செய்தியை அறியும் வண்ணம் ''எப்படி இந்த மரம் தனது வேர்களை ஆழமாய் வளர்த்து மண்ணுக்குள் நிற்கின்றதோ அதே போல் தாயகத்தில் பல்லாயிரக்கணக்காக படு கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவுகள் எத்தனை வருடங்கள் சென்றாலும் எமது நெஞ்சத்தில் வேரூன்றி நிற்கும்'' என்ற வாசகம் ஜேர்மன் மொழியில் பலகையில் பொறிக்கப்பட்டு மரத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் இனவழிப்பை எடுத்துரைக்கும் இந்த மரத்தை அகற்றுவதற்கு இலங்கைத் தூதரகம் பல தடவை முயற்சி எடுத்து தோல்வியுற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# பிரிட்டன் பிரதமர் வாசஸ்தலம் முன்பாக நாளை போராட்டம்

மே 18 தமிழீழத் தேசிய துக்க நாளை மையப்படுத்திய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் புலம்பெயர் தேசங்களில் பரவலாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இதனோர் அங்கமாக, பிரித்தானியாவில் இரத்ததான நிகழ்வொன்றை நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்துள்ளது.

ஸ்கொட்லாந்தில் இருந்து லண்டன் வரையிலான விழிப்புணர்வுப் போராட்டம் ஒன்றும் உந்துருளியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த மே12ஆம் திகதி அன்று தொடங்கிய விழிப்புணர்வுப் போராட்டம், உணர்வெழுச்சியுடன் லண்டனில் உள்ள பிரித்தானிய பிரதமர் வாசஸ்தலம் நோக்கி நடைபெற்று வருகின்றது.

நாளை 18 ஆம் திகதி அவரது வாசஸ்தலம் முன்பாகப் பெரியளவில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இம்முறை கொசோவோ பிரதிநிதி முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை!



## அமெரிக்காவில் நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு


தமிழினப் படுகொலையை நினைவேந்தும் மே 18 தமிழீழத் தேசிய துக்க நாளில் முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை ஒன்றை நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நினைவுப் பேருரையை கொசோவோ பிரதிநிதி Alush Gashi வழங்க இருக்கின்றார்.

கொசோவோவின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் முக்கிய பங்கை இவர் ஆற்றியிருந்தமையோடு, கொசோவோவின் முதல் அரசுத் தலைவரது முதன்மை ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழகத்தில் chis மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை இந்தப் பேருரை இடம்பெற உள்ளது.

இதேவேளை, நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி. உருத்திரகுமாரும் இந்த நிகழ்வில் பங்கெடுக்கவுள்ளார். (ஐ)



# மனிதநேயமற்று பாராமுகமாக மௌனித்த சர்வதேச நாடுகளுக்கு வலிகளை எடுத்துரைக்கும் மக்கள்

ஈழத் தமிழர்கள் கொத்துக்கொத்தாக கொன்றழிக்கப்பட்ட வேளையில் மனித நேயமற்று பாராமுகமாக மௌனித்த சர்வதேச நாடுகளிடம், வலிகளைச் சுமந்த மக்களே மனிதநேயத்தை எடுத்துரைக்கும் வகையில் ஜேர்மனியில், வறுமையின் வலிகளில் துடிக்கும் வேற்றின மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாள்களை மீள்நினைவுபடுத்தும் வகையில் ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பால் மால் நகரத்தில் இவ்வாறான மனிதநேய செயற்பாடுகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

அத்தோடு, கொல்லப்பட்ட தாயக உறவுகளை நினைவுகூரும் முகமாக மால் நகர தமிழ் மாணவர்கள் ஒருங்கிணைந்து சுடர் வணக்கத்தில் ஈடுபட்டனர்.

(ஐ)



# ஜேர்மன் லாண்டோ நகர முதல்வரிடம் மனு கையளிப்பு!


ஜேர்மனியில் நடைபெற்றுவரும் தமிழின அழிப்புக்கு நீதி கோரும் விழிப்புணர்வு ஊர்திப் பயணத்தின்போது ஜேர்மன் லாண்டோ நகர முதல்வரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களது அழிப்புத் தொடர்பாகவும் அதற்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கோரியும் அந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழின அழிப்பை எடுத்துரைக்கும் கண்காட்சி பதாகைகளை அமைத்து வேற்றின மக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களையும் இதன்போது விநியோகித்தனர்.

இதன்போது, மனித உரிமைகளுக்காக நடைபெறும் இந்தப் பயணம் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று லாண்டோ நகர முதல்வர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (ஐ)

# முன்னாள் அமைச்சர் சிதம்பரம் வீட்டில் சி.பி.ஐ. திடீர் சோதனை!



சென்னை, மே 17

முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் மற்றும் அவரது மகன் கார்த்தி சிதம்பரம் வீடுகளில் சி.பி.ஐ. அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இருவரது வீடுகள் உட்பட 14 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. சோதனைக்கான காரணம் குறித்து அதிகாரபூர்வ தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

ப. சிதம்பரம் டில்லிக்குச் சென்றுள்ளார். இந்த நிலையில் அவரது வீட்டில் சோதனை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய நிதி அமைச்சருமான ப.சிதம்பரம் வீட்டில் நேற்றுக் காலை9 பேர் கொண்ட சி.பி.ஐ. அதிகாரிகள் குழுவினரே இந்த அதிரடி சோதனையை நடத்தியுள்ளனர்.

சி.பி.ஐயின் இந்த அதிரடி சோதனைக்குக் காரணங்கள் என்னவாக இருக்கும் எனத் தெரியாமல் கட்சியினரும், பொது மக்களும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

அந்த வகையில், இந்த அதிரடி சோதனைக்குக் காரணமான சில விடயங்கள் ஊடகங்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது, வெளிநாட்டு பண பரிவர்த்தனை மோசடி வழக்கில் கார்த்தி சிதம்பரத்துக்கு இருந்த தொடர்பின் அடிப்படையில் சோதனை நடைபெற்றிருக்கலாம்.

- ரூபா 45 கோடி அளவில் அந்நியச் செலாவணி மோசடியில் கார்த்தி சிதம்பரம் ஈடுபட்டார் என முறைப்பாடு புகார் காரணமாக இருக்கலாம். கடந்த மாதம் அந்நியச் செலாவணி மோசடி முறைப்பாடு தொடர்பாக கார்த்தி மு.சிதம்பரத்துக்கு அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

- வாசன் ஹெல்த் கேர் லிமிடெட் நிறுவுநர் 2,262 கோடி ரூபா அளவில் அந்நிய செலாவணி மோசடியில் ஈடுபட்டார் என்று எழுந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அட்வான்டேஜ் ஸ்ட்ராடஜிக் கன்சல்டிங் பிரைவேற் லிமிடெட் நிறுவனத்துக்கும் விளக்கம் கோரி அமுலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியது.

இந்நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் கார்த்தி சிதம்பரம் இடம்பெற்றுள்ளமையின் அடிப்படையில் இருக்கலாம்.

- ஏர்செல் - மேக்சிஸ் பணப் பரிவர்த்தனை மோசடி தொடர்பான வழக்கில் கார்த்தி சிதம்பரத்துக்கு அமுலாக்கத் துறை அழைப்பாணை அனுப்பியிருப்பதாலும் சி.பி.ஐ. சோதனை நடைபெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சி.பி.ஐ. சோதனைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அரசுக்கு எதிரான எனது குரலை அடக்க நினைக்கும் மத்திய அரசின் முயற்சி வெற்றி பெறாது என ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சி.பி.ஐ. அமைப்பை எனக்கெதிராகவும், எனது மகன் மற்றும் அவரது நண்பர்களுக்கு எதிராகவும் தவறாக பயன்படுத்துகிறது மத்திய அரசு. நான் அரசை விமர்சித்து எழுதுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகவே இத்தகைய சோதனைகள் நடத்தப்படுகின்றன.

சி.பி.ஐ. சோதனைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அரசுக்கு எதிரான எனது குரலை அடக்க நினைக்கும் மத்திய அரசின் முயற்சி வெற்றி பெறாது. அரசை விமர்சிக்கும் எதிர்க் கட்சிகளும், பத்திரிகையாளர்களும், பத்தி எழுத்தாளர்களும், என்.ஜி.ஓக்களும் இத்தகைய அடக்குமுறையை சந்தித்திருக்கின்றனர்.

நான் இப்போது சொல்லிக் கொள்வதெல்லாம் அரசை விமர்சித்து தொடர்ந்து பேசுவேன், எழுதுவேன் என்பதை மட்டுமே .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொடரும் போக்குவரத்து ஊழியர்களின் வேலைநிறுத்தம்!



பயணிகள் சிரமம்

சென்னை மே 17

போக்குவரத்து ஊழியர்கள் வேலைநிறுத்தம் காரணமாகத் தமிழகம் முழுவதும் பஸ்கள் இயங்காமையால் பயணிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சென்னையில் மின்சார ரயில்களிலும், வெளியூர் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்களிலும் பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது. தனியார் பஸ்கள், ஓட் டோக்களில் பெரும்பாலானோர் பயணம் செய்கின்றனர்.

சென்னையில் மத்திய பணிமனை, வடபழனி, தியாகராய நகர், அண்ணாநகர், அடையார், சைதாப்பேட்டை, பூந்தமல்லி, குரோம்பேட்டை, தாம்பரம், ஆலந்தூர், திருவான் மியூர், அயனாவரம், வியாசர் பாடி, திருவொற்றியூர், எண் ணூர் உட்பட மொத்தம் 31 பணிமனைகள் உள்ளன.

ஒவ்வொரு பணிமனையில் இருந்து வழக்கமாக 150 முதல் 250 பஸ்கள் வரையில் இயக்கப்படுகின்றன. ஆனால்,நேற்று முன்தினம் காலையில் இருந்து வெறும் 20 முதல் 30 பஸ்கள் மட்டுமே இயக்கப் பட்டன. நேற்று மிகக் குறைந்த அளவே இயக்கப் படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

# ரஜனி அரசியலுக்கு வருவது உறுதி: பிரபல ஜோதிடர் கணித்துக் கூறுகிறார்!



சென்னை, மே 17

நடிகர் ரஜனிகாந்த் அரசியலுக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது என்று பிரபல ஜோதிடர் ஷெல்வி கணித்துள்ளார். நடிகர் ரஜனிகாந்த் நேற்று முன்தினம் தனது ரசிகர்களைச் சந்தித்துப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

அதன் பின் நான் அரசியலுக்கு வந்தால் ஊழல்வாதிகளை பக்கத்தில் வைத்துக் கொள்ளமாட்டேன் என கூறியிருந்தார். இந்தநிலையில், பிரபல ஜோதிடரான ஷெல்வி ரஜனி நிச்சயமாக அரசியலுக்கு வருவார் என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,-

நடிகர் ரஜனிகாந்திற்கு மகரராசி, திருவோணம் நட்சத் திரம், சிம்ம லக்கனம். அவருக்கு 19 வருட காலமாக சனி திசை இருந்து வருகிறது.

அதனால், அவருக்கு உடல் நலம் பாதிப்பு அதிகம் இருந்தது. எதிர்வரும் 31.01. 2018 உடன் சனி திசை முடிந்து புதன் திசை ஆரம்பமாகிறது. ரஜனியின் ராசிப்படி புதன் திசையில் கல்வி சம்பந்தப்பட்ட விஷயத்தில் அதிகம் நாட்டம் இருக்கும்.

அதுவே அவரை அரசியலுக்கு இழுத்து வந்துவிடும். பொதுமக்களுக்காக அறக்கட்டளை ஒன்றை துவங்கி, கல்வி தொடர்பான உதவிகளைச் செய்வார்.

அப்படியொரு சூழல் அவரது ஜாதகத்தில் இருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் தான் அவர் அரசியலுக்கு வருவதற்கான சூழலும் இருக்கிறது.

இனி அவர் பின்வாங்கமாட்டார், தனிச்சையாக இயங்குவது தான் ரஜனிக்கு பிடிக்கும், ஆகையால் யாருடனும் கூட்டணி இல்லாமல், தனிக் கட்சி தொடங்க வாய்ப்பு இருக்கிறது. ரஜனி அரசியலுக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது, நிச்சயம் வந்தே தீருவார், இனி அவருக்கு எல்லாமே ஜெயம் தான் என்று அவர் கூறியுள்ளார். (க)

# ஜல்லிக்கட்டுக்கு மீண்டும் தடை!



எதிர்வரும் ஜூன் மாதம் முதல் ஜல்லிக்கட்டு நடத்தத் தமிழக அரசு தடை விதித்துள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்தக் கூடாது என உச்சநீதிமன்றம் தடை விதித்ததையடுத்து, கடந்த 2 ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை.

இந்த நிலையில், இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் நடைபெற்று வந்த தொடர் போராட்டத்தின் காரணமாக தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதன்படி, விண்ணப்பங்களை பரிசீலித்து, ஏற்கனவே ஜல்லிக்கட்டு நடந்த பகுதிகளுக்கு மட்டும், மாவட்ட ஆட்சியர்கள் அனுமதி அளித்து வருகின்றனர். மேலும், மாநில அரசிதழில், ஜல்லிக்கட்டு நடக்கும் இடம், நாள் குறித்த விவரம் இடம் பெற்றிருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் கோவில், தேவாலய விழாக்களை ஒட்டி ஆண்டு முழுவதும் ஜல் லிக் கட்டு நடத்தப்பட்டது. இதன் படி, அனுமதி கேட்டு, கிராம மக்கள் தொடர்ந்து விண்ணப் பித்து வருகின்றனர்.

ஆனால் ஜனவரி - மே மாதங்கள் வரை மட்டுமே ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்க வேண்டுமென அரசு உத்தரவிட்டு உள்ளது. இதனால் கிராம மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இதுதொடர்பில் வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்-

'ஜூன் முதல் விவசாயப் பணிகள் ஆரம்பித்துவிடும் என்பதால், ஜனவரி - மே மாதம் வரை மட்டுமே ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கப்படும். ஏனைய மாதங்களுக்கு விண்ணப்பம் அளித்தால் நிராகரிக்கப்படும்.- என்று கூறியுள்ளார்.

# ரான்சம்வேர் கணினி வைரஸ் தாக்குதல்: அமெரிக்காவை குற்றம் சாட்டும் ரஷ்யா!

மஸ்கோ, மே 17

ரான்சம்வேர் எனப்படும் கணினி வைரஸ் கடந்த இரு தினங்களாக உலகம் முழுவதும் அச்சுறுத்தி வருகிறது.

100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் கணினிகளை தாக்கியுள்ள ரான்சம்வேர் இதுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாக்குதல்களை 'வண்ணக்கிராய்' ரான்சம்வேர் மேற்கொண்டுள்ளது.

இங்கிலாந்து, ரஷ்யா, சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலேயே அதிக அளவிலான ரான்சம்வேர் வைரஸ் தாக்குதல் பதிவு செய்யப்பட்டுள்ளது.


இந்தியாவைப் பொறுத்தவரை கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, டில்லி உள்ளிட்ட இடங்களின் ஒருசில பகுதிகளில் ரான்சம்வேர் தாக்குதல்கள் நடந்துள்ளன என அறியப்பட்டுள்ளன.

இதனிடையே, 'வண்ணக்கிராய்' ரான்சம்வேர் வைரஸ் தாக்குதலுக்கு அமெரிக்காவே காரணம் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் குற்றம்சாட்டியுள்ளார்.

மைக்ரோசொப்ட் நிறுவனம் அமெரிக்காவைக் குற்றம் சாட்டியுள்ள நிலையில், 'இந்த விவகாரத்தில் தாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை' என்றும், இதற்கு அமெரிக்காவே காரணம் என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஜப்பானில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கணினிகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வந்துள்ள நிலையில், சீனாவில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான கணினிகளை 'வண்ணக்கிராய்' ரான்சம்வேர் பாதித்துள்ளது.

இதேவேளை, ரான்சம்வேர் கணனி வைரஸ் தாக்குதலால் ஆசியாவின் பெரும்பாலான நாடுகளில் கடும் விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.



மின் அஞ்சல்கள் மூலம் இடம்பெற்ற இந்த சைபர் தாக்குதலால் கணினிகள் முடங்கின. இது உலக அளவில் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த தாக்குதல் பல்வேறு ஆசிய நாடுகளைக் கடுமையாகப் பாதித்துள்ளன. அதன்படி சீனாவின் மிகப்பெரிய எரிசக்தி விநியோக நிறுவனமான 'பெட்ரோசீனா', தனது கட்டுப்பாட்டில் உள்ள சில பெற்றோல் நிறுவனங்களின் நிதிக்கட்டமைப்பு முடங்கியுள்ளது என்று அறிவித்துள்ளது.

சீனாவின் பொலிஸ், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அரச அலுவலகங்களும் இந்த தாக்குதலால் முடங்கியுள்ளன எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஜப்பானின் ஹிட்டாச்சி தொழிற்சாலை, சில மருத்துவமனைகள் இந்த சைபர் தாக்குதலுக்கு உள்ளாகின என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதைப்போல இந்தோனேஷியாவின் மிகப் பெரிய புற்று நோய் மருத்துவமனையில் கணினிகள் முடங்கியமையால், நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தென்கொரியாவில் பாடசாலை ஒன்றில் மாணவர்கள் இணையத்தளம் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இவ்வாறு இந்த சைபர் தாக்குதல் ஆசியாவின் பெரும்பாலான நாடுகளில் கடும் விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. உலகளாவியல் ரீதியில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளில் சர்வதேச வல்லுநர்கள் ஈடுபட்டுள்ளனர். (க)

## 25 வயதான இளம் விஞ்ஞானி அமெரிக்க அழகியாக தேர்வானார்!



லாஸ் வேகாஸ், மே 17

லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற 'மிஸ் அமெரிக்கா' போட்டியில் 25 வயதான இளம் விஞ்ஞானி காரா மெக்கல்லோ (வயது 25) அமெரிக்க அழகியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க நாட்டின் சிறந்த அழகியைத் தேர்வு செய்யும் 'மிஸ் அமெரிக்கா' போட்டி நெவாடா மாகாணத்தின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்றது.


வெவ்வேறு மாநிலங்களின் சார்பில் 50 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ள, பல்வேறு கட்ட போட்டிகள் நடைபெற்றன. இவர்களில் 3 பேர் இறுதிப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

அவர்கள் வொஷிங்டன் மாகாணத்தின் கொலம்பியா மாவட்டத்தைச் சேர்ந்த காரா மெக்கல்லோ (வயது 25). நியூஜெர்ஸி மாகாணத்தை சேர்ந்த சாவ்வி வெர்ஜ். மினசோட்டா மாகாணத்தை சேர்ந்த மெரிடித் கோல்ட் ஆவர். இறுதிப்போட்டியாளர்களிடம் நடுவர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு காரா மெக்கல்லோ சாதுர்யமாகப் பதிலளித்தார். அதனைத் தொடர்ந்து அவர் 'மிஸ் அமெரிக்கா' வாகத் தேர்வு செய்யப்பட்டார்.

காரா மெக்கல்லோ வேதியியல் படிப்பில் பட்டம் பெற்று, அமெரிக்க அணு ஒழுங்கு முறை ஆணையத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகிறார். தொடர்ந்து 2 ஆவது முறையாக வொஷிங்டன் மாகாணத்தைச் சேர்ந்த போட்டியாளர் அமெரிக்க அழகியாகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அழகியாக பட்டம்சூட்டப்பட்டபின் பேசிய காரா மெக்கல்லோ பெண்களாகிய நாங்கள் ஆண்களுக்கு சமமானவர்கள், குறிப்பாக வேலைபார்க்கிற இடங்களில் எனக் குறிப்பிட்டார். மேலும் தான் ஒரு பெண்ணியவாதி இல்லை எனக் கூறிய அவர் சம உரிமையை விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

அமெரிக்க அழகியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் காரா மெக்கல்லோ இந்த ஆண்டு நடைபெறும் பிரபஞ்ச அழகி போட்டியில் அமெரிக்காவின் சார்பில் பங்கேற்பார் என்பது குறிப்பிடத்தக்கது.




## மாற்றுக் கட்சியிலிருந்து பிரதமரை தேர்ந்தெடுத்த பிரான்ஸ் ஜனாதிபதி!



பாரீஸ், மே 17

பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள இம்மானுவேல் மக்ரோன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த எடோர்ட் பிலிப்-ஐ பிரதமராக தேர்வு செய்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹோலண்டேயின் பதவிக்காலம் முடிவதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க கடந்த மாதம் 23 ஆம் திகதி தேர்தல் இடம்பெற்றது.

தற்போதைய ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹோலண்டே மக்கள் செல்வாக்கை இழந்தமையால் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றமையைத் தவிர்த்து விட்டார்.

இந்தத் தேர்தலில் கன்சர்வேடிங் கட்சியை சேர்ந்த பிரான்கோயிஸ் பில்லன், வலதுசாரி தலைவர் மரின் லீ பென், லிபரல் சென்டிரிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இமானுவல் மக்ரோன், மற்றும் இடது சாரிகள் சார்பில் ஜீன்-லக் மெலன்சான் ஆகிய 4 பேர் போட்டியிட்டனர்.

இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் கடந்த வாரம் வெளியாகின.

இதில் மக்ரான் 65 சதவிகித வாக்குகளுடன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட மெரீனை வீழ்த்தினார். இதையடுத்து, கடந்த ஞாயிற்றுக் கிழமை 39 வயதான மக்ரோன் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், வலதுசாரி கட்சியான குடியரசுக் கட்சியின் முக்கிய தலைவரான 46 வயது எடோர்ட் பிலிப்-ஐ பிரதமராக தேர்வு செய்து ஆச்சரியப்படுத்தியுள்ளார் புதிய ஜனாதிபதி மக்ரோன். தற்போது எம்.பியாக இருக்கும் எடோர்ட் பிலிப் இதற்கு முன்னதாக லே போர்ட் பகுதியின் மேயராக திறம்பட செயற்பட்டுள்ளார். மாற்றுக் கட்சியிலிருந்து பிரதமரைத் தேர்வு செய்துள்ள மக்ரோனின் இந்தச் செயல் அரசியல் பார்வையாளர்களால் பாராட்டப்பட்டு வருகிறது.

பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள எடோர்ட் பிலிப் விரைவில் பதவியேற்க இருக்கிறார். (க)

## வடகொரியாவை மிரட்டக் கூடாது; பதற்றத்தைத் தணிக்கப் பேசுங்கள்

பீஜிங், மே 17

உலக நாடுகள் வடகொரியாவுடன் பேச்சு நடத்த வேண்டும், மிரட்டக்கூடாது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியா மீண்டும் ஓர் அணுகுண்டு சோதனையை நடத்தியது. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும், ஐரோப்பிய யூனியனும் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்நிலையிலேயே, உலக நாடுகள் வடகொரியா உடன் பேச்சு நடத்த வேண்டும், மிரட்டக் கூடாது என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் வலியுறுத்தியுள்ளார். சீனா சென்றுள்ள புடின்,

### புடின் வலியுறுத்து

பீஜிங் நகரில் இது குறித்து மேலும் பேசுகையில்-

வடகொரியா அணு குண்டு சோதனைகளை நிகழ்த்தி வருவது ஏற்றுக்கொள்ள முடியாது. கொரிய தீபகற்ப பகுதியில் நிலவிவரும் பதற்றமான சூழலுக்கு அமைதியான தீர்வு தேவையாக உள்ளது.

யார் சொன்னது பேச்சு நடவடிக்கை தீங்கு மற்றும் ஆபத்தானது என்று? .- என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 17

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான நடப்பு வருடத்திற்கான கரபந்தாட்டப் போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாள்கள் இடம்பெற்று நிறைவடைந்துள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் 20 வயதின் கீழ் ஆண்கள், பெண்கள், 18 வயதின் கீழ் ஆண்கள் பெண்கள் மற்றும் 16 வயதின் கீழ் ஆண்கள், பெண்கள் என மொத்தம் ஆறு பிரிவுகளின்கீழ் போட்டிகள் இடம்பெற்றன.

வட மாகாண கரபந்தாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி வரும் கழக அணிகள் காணப்படும் கோப்பாய் கல்விக்கோட்டத்தினர் மிக நீண்ட காலமாக பாடசாலை மட்டப் போட்டிகளிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

எனினும், கோப்பாய் கோட்டத்தின் ஆதிக்கமானது கடந்த சில வருடங்களாகத் தளர்வடைந்த நிலையில் வெற்றியை மாகாணத்தின் சகல பகுதிகளைச் சேர்ந்த அணிகளும் பகிர்ந்து வருகின்றன.

**20 வயதிற்குட்பட்டோர் ஆண்கள் பிரிவு**

அரையிறுதிப் போட்டியில் வவுனியா ஸ்ரீ சுமண மகா வித்தியாலய அணியை 2:0 என்ற நேர் செற்களில் வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்திருந்தது சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் மறுமுனையில் பரபரப்பான போட்டியில் 2:1 என மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலய அணியை வீழ்த்தி புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியினர் இறுதி மோதலில் களங்கண்டனர்.

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமான இப் போட்டியின் முதலாவது செற் சம புள்ளிகளுடன் நகர்ந்தது. ஒரு கட்டத்தில் அபாரங்காட்டிய விக்டோரியாவின் வீரர்கள், நேர்த்தியான அறைதல்கள் மூலம் தம்பக்கம் புள்ளிகளை விரைவாகச் சேகரிக்கத் தொடங்கினர். இறுதியில் 25:21 என விக்டோரியா கல்லூரி அணியினர் முதல் செற்றைத் தமதாக்கினர்.

இதன் காரணமாக போட்டியை தக்கவைப்பதற்கு இரண்டாவது செற்றில் அவசியம் வெற்றிபெற வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது சோமஸ்கந்தா கல்லூரி அணி.

இரண்டாவது செற்றிலும் இரு அணி வீரர்களும் சிறந்த பணித்தல்கள், அறைதல்கள், தடுப்புகள் மற்றும் காப்புகள் என அனைத்துத் துறைகளிலும் சிறந்த முறையில் தமது திறமையைக் காண்பித்தனர். இதனால் முதலாவது செற்றை போன்றே நகர்ந்தது இரண்டாவது செற்றும். சோமஸ்கந்தா வீரர்களின் அதிகமான அறைதல்கள் எல்லைக் கோட்டிற்கு வெளியே செல்ல, இரண்டாவது செற்றையும் 25:22 எனக் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைத் தமதாக்கியது சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.



விக்டோரியா கல்லூரி அணி



ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி



கோப்பாய் மகா வித்தியாலய அணி

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் வவுனியா ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம் மற்றும் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் மோதிய இப்போட்டி, விறுவிறுப்பிற்குப் பஞ்சமில்லாது இடம்பெற்றிருந்தது.

முதலாவது செற்றை ஸ்ரீ சுமண அணி 25:23 என தமதாக்க, தொடர்ச்சியாக இடம்பெற்ற இரண்டு செற்களையும் முறையே 25:13, 25:22 எனக் கைப்பற்றி அபார வெற்றிபெற்றது எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம்.

**18 வயதிற்குட்பட்டோர் ஆண்கள் பிரிவு**

அரையிறுதிப் போட்டியில் முறையே ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம் மற்றும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகிய அணிகளை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிகொண்ட ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியும் இறுதிப் போட்டியில் மோதின.

முதலாவது செற்றில் உத்வேகத்துடன் ஆடிய மகாஜனா வித்தியாலய அணி வீரர்கள் காற்றின் சாதகத்தன்மையும் கிடைக்க 25:12 என குறித்த செற்றை தமதாக்கினர். இரண்டாவது செற்றில் அவ்வாறே சோமஸ்கந்தா கல்லூரி அணிக்கும் அதே சாதகம் கிடைக்க, அவ்வணி வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டு 25:13 என இரண்டாவது செற்றைத் தமதாக்கினர்.

தீர்மானம்மிக்க மூன்றாவதும் இறுதியுமான செற்றை 25:19 எனக் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றியைத் தமதாக்கினர் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியினர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், வவுனியா ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் மோதிய இந்தப்போட்டியில் 25:20, 21:16 என தொடர்ச்சியாக இரண்டு செற்களையும் இலகுவாகக் கைப்பற்றி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம்.

**16 வயதிற்குட்பட்டோர் ஆண்கள் பிரிவு**

ஸ்ரீ சுமண மகா வித்தியாலய அணியை 2:1 என் அரையிறுதியில் வீழ்த்திய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியும், அவ்வாறே ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியை 2:1 என வெற்றி பெற்ற கோப்பாய் மகா வித்தியாலய அணியும் 16 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் இறுதிப் போட்டியில் களங்கண்டிருந்தன.

இந்த மோதலில் நேர்த்தியான அறைதல்களை மேற்கொண்ட கோப்பாய் மகா வித்தியாலய அணி முதலாவது செற்றை 25:16 என தமதாக்கியது. இரண்டாவது செற்றில் நுட்பமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 25:10 என பதிலடி கொடுத்தது.

தீர்மானம்மிக்க இறுதி செற்றில் இரு அணிகளும் சிறந்த அறைதல்களுடன் பலத்த போராட்டத்தை வெளிப்படுத்தின. இறுதியில் 25:20 என மூன்றாவது செற்றைக் கைப்பற்றிய கோப்பாய் மகா வித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் வவுனியா ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் ஆகிய அணிகள் மோதின.

இப்போட்டியை 25:16, 25:19 என தொடர்ச்சியாக இரண்டு செற்களையும் கைப்பற்றிய ஸ்ரீ சுமண வித்தியாலய அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தமதாக்கியது.

**பெண்கள் பிரிவு**

*20 வயதிற்குட்பட்டோர்*

முதலாம் இடம் - யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

இரண்டாம் இடம் - கிளி/பளை மத்திய கல்லூரி

மூன்றாம் இடம் - யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்

*18 வயதிற்குட்பட்டோர்*

முதலாம் இடம் - யா/வயாவிளான் மத்திய கல்லூரி

இரண்டாம் இடம் - யா/ சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

மூன்றாம் இடம் - யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

*16 வயதிற்குட்ட்டோர்*

முதலாம் இடம் - யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

இரண்டாம் இடம் - யா/கோப்பாய் மகா வித்தியாலயம்

மூன்றாம் இடம் - மு/கலைமகள் வித்தியாலயம்.



# ரியல் மாட்ரிட் அணிக்காக 400 கோல்கள்: ரொனால்டோ சாதனை!

மாட்ரிட், மே 17

செவிலா அணிக்கெதிராக இரண்டு கோல்கள் அடித்ததன் மூலம் கிறிஸ்டியானோ ரொனால்டா ரியல் மாட்ரிட் அணிக்காக 400 கோல்கள் அடித்து சாதனைப் படைத்துள்ளார்.

போர்த்துக்கல் நாட்டின் தலைசிறந்த உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. மான்செஸ்டர் அணிக்காக விளையாடிய இவர், 2009 ஆம் ஆண்டு 94 மில்லியன் யூரோவிற்கு ரியல் மாட்ரிட் அணிக்கு மாறினார்.


ரொனால்டோ தற்போது ரியல்மாட்ரிட் அணிக்காக அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அந்த அணியின் நட்சத்திர வீரராக விளங்கி வருகிறார்.

லா லிகாவில் நேற்று முன்தினம் ரியல் மாட்ரிட் அணி செவிலாவை எதிர் கொண்டது. இதில் ரியல் மாட்ரிட் 4-1 என வெற்றி பெற்றது. இதில் ரொனால்டோ இரண்டு கோல்கள் அடித்தார்.

ரொனால்டோ முதல் கோலை அடிக்கும்போது ரியல் மாட்ரிட் அணிக்காக 400 கோல்கள் அடித்துச் சாதனைப் படைத்துள்ளார்.

இதில் லா லிகா தொடரில் 282 கோல்களும், சம்பியன்ஸ் லீக் தொடரில் 88 கோல்களும், கோபா டெல் ரெய் தொடரில் 22 கோல்களும், கிளப் உலகக் கோப்பை ஆட்டத்தில் நான்கு கோல்களும், ஸ்பெயின் சூப்பர் கோப்பையில் மூன்று கோல்களும், யூ.இ.எப்.ஏ சூப்பர் கோப்பையில் இரண்டு கோல்களும் அடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மெட்ரிட் பகிரங்க டென்னிஸ் ஆடவர் சம்பியனானார் நடால்!



பாரிஸ், மே 17

பாரிஸில் நடைபெற்ற மெட்ரிட் பகிரங்க டென்னிஸ் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் டொமினிக் தியெமை 2 நேர் செட்களில் வெற்றி கொண்ட ரபாயல் நடால் சம்பியனானார்.

மெட்ரிட் பகிரங்க டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் போட்டியில் ஐந்தாவது தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றெடுத்த ஸ்பெய்ன் வீரர் ரபாயல் நடால், ஆடவர் ஒற்றையர் டென்னிஸ் தரவரிசையில் நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பார்சிலோனா பகிரங்க டென்னிஸ், மொன்டே கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆகிய போட்டிகளைத் தொடர்ந்து நடால் வென்றெடுத்த மூன்றாவது நேரடி சம்பியன் பட்டம் இதுவாகும்.

ஆஸ்திரேலிய வீரர் டொமினிக் தியெமுடனான இந்த இறுதிப் போட்டி நடாலுக்கு இலகுவாக அமையவில்லை.

சமநிலை முறிப்பு வரை நீடித்த முதலாவது செட்டில் நடால் 7 - 6 (10 - 8) என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

இரண்டாவது செட்டை 6 - 4 என வெற்றிகொண்டு, சம்பியன் பட்டத்தை நடால் தனதாக்கிக்கொண்டார்.

# ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் விளையாட்டு விழா!





யாழ்ப்பாணம், மே 17

ஊர்காவற்றுறை பிரதேச இந்த ஆண்டுக்கான இளைஞர் விளையாட்டுவிழா நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் யு. அசோக் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை தீவகம் வடக்கு பிரதேசசெயலர் திருமதி அன்ரன் யோகநாயகம், யாழ். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்பணி மு. ஜேம்ஸ் சிங்கராஜர், யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந்திரன், யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீமேனன், யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் சு. காமராஜ், தேசிய சேவைகள் துறைதேசிய இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் விஜிதரன், தீவக இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை உரிமையாளர் யு. கிருபாகரன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

# ஜெயசூர்யா- தரங்கவின் சாதனையை முறியடித்தது இந்திய மகளிர் அணி!



டில்லி, மே 17

அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்திய மகளிர் அணி, இலங்கை அணியின் ஜெயசூர்யா- தரங்க ஜோடி அடித்த சாதனையை முறியடித்துள்ளது.

மகளிருக்கான QUADRANGULAR கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் 8 ஆவது போட்டியில் அயர்லாந்து அணியும், இந்திய அணியும் மோதின.

அதன்படி நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

துவக்க வீரர்களாக இந்திய அணிக்கு டீப்தி சர்மா- பூனம் ரவுட் களமிறங்கினர். இவர்கள் இருவரும் ஆரம்ப விக்கெட்டிற்கு 320 ஓட்டங்கள் குவித்தனர். பூனம் ரவுட் சதம் கடந்து 188 ஓட்டங்களும், டீப்தி சர்மா சதம் கடந்து 109 ஓட்டங்களும் குவித்தனர்.

இறுதியாக இந்திய அணி 50 ஓவர் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 358 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து ஆடிய அயர்லாந்து அணி 40 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்கள் எடுத்து 249 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

ஆரம்ப விக்கெட்டிற்கு 320 ஓட்டங்கள் குவித்த இந்திய மகளிர் அணியினர், ஒருநாள் போட்டியில் இலங்கை அணியின் உபுல் தரங்க மற்றும் சனத் ஜெயசூர்யா பெற்ற 286 ஓட்டங்களை முறியடித்துள்ளனர்.

இவர்களின் இந்தச் சாதனையை இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக் தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

## ஒருபுறம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஊடக அமையத்தில் தாம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சிறிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

**பொறுத்திருந்து பார்ப்போம்**

புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த அரசமைப்பு உருவாக்கத்திலும் அதில் உள்ள விடயங்களிலும் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக வடக்கு - கிழக்கு இணைப்பு, பௌத்தத்திற்கு முன்னுரிமை, சமஷ்டியா, ஒற்றையாட்சியா என்பன குறித்துப் பல்வேறு கருத்துக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஆனாலும், புதிய அரசமைப்பு நகல் வெளியிடப்பட்ட பின்னரே அதில் என்ன விடயங்கள் இருக்கின்றன என்ன விடயங்கள் இல்லை என்பதும் அது எவ்வாறான தீர்வாக இருக்குமென்பதும் தெரிய வரும். ஆகவே அந்த நகல் வரும் வரையில் பொறுத்திருப்போம்.

இவ்வாறு அரசமைப்பு மற்றும் அரசியல் தீர்வு என்பன குறித்து ஒரு புறம் பேசி வருகையில், மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளான காணாமற் போனோர் விவகாரம், மீள்குடியேற்றம், அரசியல்கைதிகள் விடுதலை என்பன குறித்தும் பேசி வருகின்றோம். இதில் அரசிற்கு கடுமையான அழுத்தங் களையும் வழங்கி வருகின்றோம். - என்றார்.

**முதலமைச்சராவதற்கு தகுதியில்லை**

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது வடக்கு மாகாண முதலமைச்சராகத் தாம் போட்டியிட உள்ளார் எனத் தெரிவிக்கப்படும் கருத்துக்களை மறுத்துள்ள சிறிதரன், முதலமைச்சராவதற்கான தகுதியைத் தாம் இன்னும் பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலுக்கு தாம் வந்த இலக்குகளை அடையவில்லை என்றும் மக்களுக்கு இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் மக்களை ஏமாற்றியிருப்பதுடன் கண்டும் காணாமலும் மக்களைத் தவிக்க விட்டிருப்பதால் மக்கள் தாமாகவே முன்வந்து தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றபோது பதவிக் கதிரைகளுக்காக நாங்கள் போராடக் கூடாது. முதலமைச்சர் பதவி என்பது குறித்து கட்சியே தீர்மானிக்கும். கட்சியில் அதற்குத் தகுதியுடைய பலர் இருக்கின்றனர். - என்றும் அவர் பதிலளித்தார்.

**இணக்க அரசியலை நாங்கள் செய்யவில்லை**

தமிழ் மக்களிற்கு தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றுக்கான தீர்வுகள் குறித்துத் தற்போது அரசாங்கத்துடன் பேசி வருகின்றோம். இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணக்க அரசியல் நடத்தி வருகின்றதென்று கருதக் கூடாது. நாங்கள் சில விட்டுக்கொடுப்புக்களை தேவைகருதி செய்தாலும் கொடுக்க வேண்டிய அழுத்தங்களை அரசிற்குக் கொடுத்தே வருகின்றோம்.

**மக்களின் ஆணைக்கு துரோகம் செய்ய மாட்டோம்**

தமிழரசுக் கட்சி சரியான பாதையில் செல்லவில்லை என்றும் தமிழரசுக்கட்சி இழைக்கின்ற தவறுகளுக்கு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான நான் வெள்ளையடிப்புச் செய்கிறேன் என்றும் கூறப்படுவதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். நான் என்னுடைய பாதையில் சரியாகவே சென்று கொண்டிருக்கின்றேன். அதற்காக என்னுடைய பயணம் யாருக்கும் வெள்ளையடிப்புச் செய்வதாக அமைந்து விடாது.

ஆனாலும் ஒரு கட்சி உறுப்பினராக அந்தக் கட்சிக் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட வேண்டிய அதே நேரத்தில், மக்களின் பிரதிநிதியாக மக்களுக்காகச் செயற்படுகின்ற அதிகாரமும் இருக்கின்றது. இதனைத்தான் நான் செய்து வருகின்றேன். மக்கள் எமக்கு வழங்கும் ஆணையைச் சரியான முறையில் பயன்படுத்துவோமே தவிர அதனைத் துரோகம் செய்யமாட்டோம். - என்றார்.

**உத்தரவாதம் கிடைத்தால் பதவியை தூக்கியெறியத் தயார்**

தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதவி விலக வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. காணாமற்போனோர் விவகாரத்திற்கு மட்டும் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் எங்களுக்கு ஆணை வழங்கவில்லை. எங்களுடைய மக்கள் எதற்கெல்லாமாக ஆணை வழங்கினார்கள் என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்திலே நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

நாங்கள் சுகபோக வாழ்க்கை வாழ்வதாகவும், குளிரூட்டிய வாகனங்களில் திரிவதாகவும் கூறுகின்றவர்கள், எங்கள் வீடுகளுக்கு வந்து பார்த்தால் எங்களது நிலைமைகளும் தெரிய வரும். நாங்கள் வகிப்பது வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிதான். நாங்கள் சுகபோக வாழ்க்கை வாழவும் இல்லை.

இருந்தும் எமது மக்களுக்காகப் பதவியைத் துறக்க வேண்டிய நேரம் வந்தால் பதவியைத் துறக்கத் தயார். அதாவது எங்களது பதவிகளைத் துறந்தால் தான் எமது மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்றால் அதற்காகப் பதவிகளைத் துறப்போம். அவ்வாறான உத்தரவாதம் கிடைத்தால் எங்களது பதவிகளைத் தூக்கி யெறிவோம். - என்றார்.

**நாங்கள் உடந்தையல்ல**

நல்லாட்சி அரசின் காலத்திலும் தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆக்கிரமிப்பு மற்றும் திணிப்பு நடவடிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை நிறுத்த வேண்டுமென்றே கோரிக்கைவிடுத்துவருகின்றோம்.

குறிப்பாகத் தற்போதும் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் பல வழிகளிலும் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு நாங்கள் ஒருபோதும் உடந்தையாக இருந்ததில்லை. குறிப்பாக நாவற்குழியில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் மற்றும் சட்ட விரோதமாக விகாரை அமைத்தல் போன்றன குறித்து நான் நாடாளுமன்றிலும் பேசியிருக்கின்றேன்.

அதே நேரம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மாகாண சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனாலும் இவை எல்லாவற்றையும் மீறி அதிகார எல்லையைப் பயன்படுத்தி அரசாங்கம் தன்னுடைய செயற்பாடுகளைத் திட்டமிட்ட வகையில் தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டே வருகின்றது. இதற்கமையவே நாவற்குழியில் பாரிய தூபியொன்றும் அமைக்கப்பட்டு இருக்கின்றது. எனினும் நாங்கள் இதனை எதிர்க்கிறோம். - என்றார்.

## அப்பாவிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவு என்ற பெயரில் வடக்கில் சிவாஜிலிங்கம் விளக்குகள் ஏற்றி படையினரை அவமதிக்கிறார் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன நேற்று முன்தினம் சிவாஜிலிங்கத்தைக் குற்றஞ்சாட்டிய நிலையில், அதற்குப் பதிலளிக்கும் முகமாகவே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று மதியம் 1.45 மணிக்கு திருகோணமலை நகரில் கடற்கரையில் அமைந்திருக்கும் காந்திசிலைக்கு முன்பாக வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஏழு மாத குழந்தை உட்பட பலரை வெட்டிக் கொன்ற குமுதினிப் படுகொலை, திருகோணமலையில் இதே காந்தி சிலைக்கு முன்பாக ஐந்து மாணவர்கள் படுகொலை, மூதூர் கிளிவெட்டி குமாரபுரம் படுகொலை போன்ற பலபடுகொலைகளை நினைத்து ருவான் விஜயவர்த்தன மன வருத்தப்பட வேண்டுமே தவிர, என்னை நினைத்து அல்ல.

தமிழ் மக்களைப் படுகொலை செய்தவர்களைத் தண்டிப்பதை விடுத்து என்னை விமர்சிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. - என்றார் எம்.கே. சிவாஜிலிங்கம். (மு)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குக் கிடைக்கும் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பான இலங்கை மற்றும் மாலைதீவுக்கான - குழுவின் அதிகாரி துன் - லாய் மார்கு இதனைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் நிலவிய மிக மோசமான மனித உரிமைகள் நிலைவரத்தை அடுத்து, முன்னர் இந்தச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ரத்துச் செய்திருந்தது.

இந்தச் சலுகை மீளக் கிடைப்பதால் பாரிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்கள் பெரிதும் நன்மை அடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் இனவாதத்தின் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன என்றும் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க காட்டமாகக் கூறியிருக்கின்றார்.

நல்லிணக்க நகர்வில் காலத்தை இழுத்தடித்துவரும் இலங்கை அரசை வழிப்படுத்துவதற்கு சர்வதேச அழுத்தம் அவசியம் என்று முதல்வர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியமை தொடர்பிலேயே இந்தச் சீற்றத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார் அமைச்சர் திஸ நாயக்க. (உ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களும் பல்கலைக்கழக சமூகத்தினரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை எழுச்சியுடன் முன்னெடுத்தனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களோடு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் இணைந்து கொண்டனர். (உ)

## நீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிக்கான குரல் எழுப்பிய மக்களை நீதிக்காய் குரல் எழுப்பினார்கள், அதனோடு இணைந்து நடந்தார்கள் என்பதற்காகவே சர்வதேச யுத்த விதிகளை புறந்தள்ளி, மனிதத்துவ நடைமுறைகளையெல்லாம் தூக்கியெறிந்து, பாலியல் பலாத்காரங்களை, உயிர்வாழ்வதற்கான உணவை, மருந்தைக்கூட ஆயுதமாக்கி, சாட்சியங்களை முடியுமானவரை அகற்றி, பூகோள அரசியல் போட்டியின் பகடைக் காய்களாக்கப்பட்டு, சர்வதேசம் கண்மூடி இருக்க, வஞ்சிக்கப்பட்டு, எமது மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

எதுவுமறியாத பாலகர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள் என எந்த வேறுபாடுகளும் இன்றி, தமிழர்கள் என்பதற்காகவே ஆயிரம் ஆயிரமாய் எமது மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

அந்த அவலங்களின் உச்சக் கட்டங்கள் நிகழ்ந்தேறிய நாள் தான் மே 18 .

2006ஆம் ஆண்டுவாகரை மண்ணில் உச்சம் பெறத் தொடங்கிய இந்த கோரத்தாண்டவம் 2009 மே 18 இல் வன்னியின் முள்ளிவாய்க்கால் மண்ணில் வரலாறுகாணாத பேரவலத்தை விதைத்திருந்தது.

அந்த மானுடப் பேரவலத்தின் எட்டாவது ஆண்டு நினைவு காலத்தை நாம் இப்போது அனுஷ்டித்து வருகின்றோம்.

உண்மையில் சிறிலங்கா அரசு தமிழர்கள் மீது தொடர்ச்சியாக இழைத்துவரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகள் உச்சம் பெற்ற ஒரு தினமே மே 18 ஆகும்.

உண்மையில் எம்மீதான இனப்படுகொலையின் ஒரு குறியீட்டு நாளாகவே இந்த மே 18 ஐ தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஒருமுகப்பட்டு அனுஷ்டிக்கின்றோம்.

இந்தத் தினத்தில், தொடர்கின்ற இனப்படுகொலையில் கொல்லப்பட்டு இந்த மண்ணில் வீழ்ந்த அனைவருக்கும் எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

தாயகத்தில் வாழுகின்ற மக்கள் முடிந்தவரை மானுடப் பேரவலம் நிகழ்ந்தேறிய முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழும் நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்துகொண்டு கொல்லப்பட்ட மக்களுக்கான தமது அஞ்சலிகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனையவர்கள் தாம் வாழும் இடங்களில் அஞ்சலி தீபமேற்றி மூன்று நிமிட மௌன அஞ்சலி செலுத்தி இந்த மண்ணில் வீழ்ந்த எம் உறவுகளை நினைவு கூருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இனிவரும் காலங்களில் எமது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து 'இனப்படுகொலை நினைவேந்தல் குழுமம்' ஒன்றின் மூலம் நினைவாலயம் ஒன்றை முள்ளிவாய்க்கால் மண்ணில் நிறுவுவதும் இனப்படுகொலைக்கான ஆவணப்படுத்தலை ஒருங்கிணைப்பதும் அனைவராலும் நேர்மையுடன் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளானவை இதுவரை காலமும் இனப்படுகொலையில் கொல்லப்பட்ட மக்களுக்கு வெறுமனே அஞ்சலி செலுத்தி விளக்கேற்றும் நிகழ்வாக மட்டும் குறுக்கப்பட முடியாதது.

சர்வதேச விதிகளை அப்பட்டமாக மீறிக் கொடூரமாகக் கொல்லப்பட்டவர்களுக்கும் தொடரும் இனப்படுகொலைக்குமான பொறுப்புக் கூறலிற்கான குரலை எந்தவித சமரசம் இன்றி முன்னெடுத்து செல்வோம் என உறுதி பூணவேண்டிய நாளும் இதுதான்.

எந்த அரசியல் உரிமைக்காக, இம்மானுட நீதிக்காக குரல் எழுப்பி அதற்காய்க் கொல்லப்பட்டார்களோ அந்த அரசியல் உரிமைக்கான குரலை தொடர்ந்தும் நீதியுடன் முன்னெடுப்போம் என எம்மை நாமே மீள உறுதிப்படுத்த வேண்டிய தினமும் இதுதான் .

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை உதாசீனம் செய்து நிகழ்த்தப்பட்ட இந்த இனப்

பக்கம் 03 >>>

## மறிச்சுக்கட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. அபயகோனுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதியின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி குழு ஒரு மாதகாலத்துக்குள் விடயத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸிலின் தலைமையில் முஸ்லிம் அமைச்சர்கள், முஸ்லிம் சிவில் இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள், மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர்கள், வன பாதுகாப்புத் திணைக்கள அலுவலர்கள் போன்றோரும் பங்குபற்றினர். (உ)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குச் சென்றுள்ள நிலையில் - அவர் நாட்டில் இல்லாதசமயத்தில் - அமைச்சரவையைக் கூட்டுவதற்கான அழைப்பு அமைச்சர்களுக்குப் பறந்ததாக அறிய வந்தது.

எனினும் இறுதிநேர அழைப்புடன் கூட்டப்பட்ட நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு பல முக்கிய அமைச்சர்கள் வருகைதரவில்லை எனக்கூறப்பட்டது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்ட வரைவை அமைச்சரவை அங்கீகரித்திருப்பதால் எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அது அவ்வேளையில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அத்தொடரிலேயே அங்கீகரிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

அப்போது அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அடுத்த இரண்டு, மூன்று மாதங்களுக்குள், இதுவரை இரண்டு வருடங்களுக்கு மேல் நிகழாவையாக இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை தேர்தல் ஆணையகம் நடத்தக்கூடியதாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. (உ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடத்துகின்றனர்.

கண்டி, மைலப்பிட்டிய ரணவிருயுத்த வீரர்கள் நினைவு மையப் பகுதியில் இது தொடர்பான நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு வருவதாகத் தெரியவந்தது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் பங்குபற்றுவார்களா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும், யுத்தத்தில் அங்கவீனமடைந்த இராணுவ வீரர்கள் இந்நிகழ்வில் பங்குகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

காலைக்கதிர்



# தேசிய தன்மைக்கு குறையை ஏற்படுத்திச் சென்றுள்ளார் மோடி!

## சாடுகிறார் வாசுதேவ எம்.பி.



கொழும்பு, மே 17

ஓர் இனத்தை மாத்திரம் இந்தியப் பிரதமர் சந்தித்து உரையாற்றியதன் மூலம் இலங்கையர் என்ற தேசியத் தன்மைக்கு குறையை ஏற்படுத்தியுள்ளார். மாறாக கண்டியில் இதனை ஏற்பாடு செய்திருந்தால் இரு நாட்டின் உறவைப் பலப்படுத்துவதற்கு முன்மாதிரியாக இருந்திருக்கும் என்று சாடியுள்ளார் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையக மக்களுக்கு இந்தியாவுடன் வரலாற்று ரீதியாகத் தொடர்பு இருந்து வருவது அனைவரும் அறிந்த விடயமாகும். அதனடிப்படையில் இந்திய அரசும் மலையக மக்களுக்கு பல உதவிகளை மேற்கொண்டு வந்துள்ளது. அவர்களுக்கு இலங்கையில் பிரஜா உரிமை இல்லாததன் காரணமாகவே அந்தத் தொடர்பு தொடர்ந்தும் இருந்து வந்தது.

என்றாலும் தற்போது அவர்களுக்கு இலங்கையர் என்ற பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இந்திய பிரதமர் நோர்வூட்டில் ஓர் இனத்தை மாத்திரம் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றியமை ஒருவகையில் அது இலங்கையர் என்ற ஐக்கியத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பெரிய குறையாக அமைந்துள்ளது.-என்றார். (எ)

## இலவச வழிகாட்டல் வகுப்பு

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெற உள்ள பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக நடத்தப்பட உள்ளன. காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இவ் வகுப்புக்கள் நடைபெறும்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலகம் இதற்கான ஒழுங்கமைப்பைச் செய்துள்ளது.

நடைபெறவுள்ள பாடங்கள்- பொது உளச்சார்பு, மொழித்திறன்

★ பிரதேச செயலாளர் பிரிவு - பச்சிலைப்பள்ளி, எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை, பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், பளை.

★பூநகரி- எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை, பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்.

★கரைச்சி- எதிர்வரும் 24 ஆம் திகதி, புதன்கிழமை, மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், மாவட்ட கூட்டுறவாளர் மண்டப ஒழுங்கை, கிளிநொச்சி.

★கண்டாவளை, எதிர் வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை, திட்டமிடல் கிளை, மாநாட்டு மண்டபம், புளியம்பொக்கணை.

அனுபவம், ஆற்றல் மிக்க விரிவுரையாளர்களால் தயாரிக்கப்பட்ட பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும் என்றும் அவர்களால் வகுப்பில் வைத்து வினாக்களுக்கு செய்முறை விளக்கத்துடன் விடைகள் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்பு -021 228 3363. (இ)

## பாலாவி உப்பளத் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்பை கோரி ஆர்ப்பாட்டம்



புத்தளம், மே 17

புத்தளம், பாலாவி உப்பளத்தில் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலாவி உப்பளத்தில் சுமார் 200 பேர் தொழில் புரிகின்றனர்.

பல வருடங்களாக தொழில் புரியும் தமக்கு குறைந்தளவிலான சம்பளமே கிடைப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதனால் தமது சம்பளத்தை விரைவில் அதிகரித்துத் தர வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை.

மேலும், உப்பின் விலை கூடினாலும் தமது சம்பளம் கூடவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## நாளை மின் தடை

நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம், உக்குளாங்குளம், தெற்கிலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மடுக்கரை அகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## வெசாக் மாநாட்டில் மதகுரு போல் வேடமிட்டவருக்கு விளக்கமறியல்

சர்வதேச வெசாக் மாநாட்டில் மதகுரு போன்று வேடமிட்டு கலந்துகொண்ட நபர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த மாநாடு கடந்த 12 ஆம் திகதி பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஒருவர் மதகுரு போன்று வேடமிட்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார் அந்த நபரை கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். அதையடுத்து, அவரை எதிர் வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# எமது இயற்கைச் சூழல் குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டும் நோக்கில் வலசை பறவைகள் தினம்

## வடக்கு சுற்றாடல் அமைச்சர் ஐங்கரநேசன் அறிவிப்பு





வடமாகாண வலசைப் பறவைகள் தினம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தின் இரண்டாவது வார இறுதி நாள்களில் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சால் உலக வலசைப் பறவைகள் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான கருத்தமர்வும் வெளிக்களப் பயிற்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் பங்கேற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலக வலசைப் பறவைகள் தினம் ஆண்டு தோறும் மே மாதம் இரண்டாவது வாரத்தின் இறுதி நாள்களில் கொண்டாடப்பட்டு வருகிறது.

கடல் நீரேரிகளைக் கொண்டிருப்பதால் யாழ். குடாநாடு தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவான பறவைகள் வந்து தங்கிச் செல்லும் இடமாக உள்ளது.

இதைக் கருத்திற் கொண்டு வலசைப் பறவைகள் பற்றியும் எமது இயற்கைச் சூழல் பற்றியும் மாணவர்களுக்கு அறிவூட்டும் நோக்கில் நாங்களும் உலக வலசைப் பறவைகள் தினத்தை 2015ஆம் ஆண்டில் இருந்து சிறப்பாகக் கடைப்பிடித்து வருகிறோம்.

ஆண்டுதோறும் ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் வருகின்ற வலசைப் பறவைகளில் பெரும்பாலானவை ஏப்ரல், மே மாதங்களில் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று விடுகின்றன.

ஏப்ரல், மே மாதங்களில் எங்களது கடல் நீரேரிகளும் வற்ற ஆரம்பித்து விடுகின்றன. இதனால் மாணவர்கள் கூடுதலான பறவைகளை அவதானிப்பதற்கு வசதியாக வடமாகாணத்துக்குப் பொருத்தமான காலப்பகுதியில் வலசைப் பறவைகள் தினத்தை ஏற்பாடு செய்யுமாறு பறவை ஆய்வாளர்கள் எங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

பல நாடுகள் தங்களது பருவ நிலைக்கேற்பவே வலசைப் பறவைகள் தினத்தைக் கொண்டாடி வருகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டே வடக்கு மாகாண வலசைப் பறவைகள் தினத்தை அடுத்த ஆண்டில் இருந்து பெப்ரவரி மாதத்தில் இரண்டாவது வார இறுதி நாள்களில் கொண்டாடுவது என்று விவசாய அமைச்சின் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரவையிலும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையிலும் இது அறிவிக்கப் பட்டுள்ளது.- என்றார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (எ)



மன்னார் நகர எல்லைக்கு உட்பட்ட ஒட்டோ உரிமையாளர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக்கான பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையேற்று நடத்தினார். வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஏ.நீக்கிலாப்பிள்ளை, மன்னார் மாநகர சபையின் செயலாளர் சேவியர் பிரிட்டோ லெம்பேட், பொலிஸ் அதிகாரி ஆகியோர் இந்நிகழ்வுக்கு சமுகமளித்திருந்தனர்.

## சரோஜினி நினைவு தினம்

சுட்டுக்கொலைசெய்யப்பட்ட யாழ். முன்னாள் முதல்வர் திருமதிசரோஜினியோகேஸ்வரனின் 19 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் நினைவுக் கூட்டம்ஒன்றுநடைபெறுகின்றது.

தமது கணவர் 1989 ஜுலை 13 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் 1998 இல் நடைபெற்ற யாழ். மாநகர சபைத் தேர்தலில் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நின்று போட்டியிட்டு வென்றவர் திருமதி யோகேஸ்வரன் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# தம்பதியர்கள் மீது கத்திக்குத்து கணவன் பலி; மனைவி படுகாயம்

### கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் சம்பவம்

கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி – கனகபுரம் வீதியில் ஹோட்டல் ஒன்றை நடத்தி வந்த கணவன், மனைவி மீது நடத்தப்பட்ட கத்திக்குத்தில் கணவன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மனைவி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

சம்பவத்தில் உதயநகர் மேற்கைச் சேர்ந்த நாகராசா திருக்குமார் (வயது-45) என்பவர் உயிரிழந்தார். அவரது மனைவியான திருக்குமார் கிருஷ்ணவேணி (வயது-40) என்பவர் படுகாயமடைந்தார். அவர் கிளிநொச்சிவைத்தியசாலையில்சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி கணவனும் மனைவியும் கனகபுரம் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றை முற்பணம் செலுத்தி குத்தகைக்குப் பெற்று நடத்திவந்தனர். குத்தகைக் காலம் முடிவடைந்த நிலையில் ஹோட்டலை விடுவித்த அவர்கள் ஹோட்டல் உரிமையாளரிடம் முற்பணத்தைக் கோரியுள்ளனர்.

இதன்போது எழுந்த வாக்குவாதம் முற்றியதில் ஹோட்டல் உரிமையாளர் மேற்படி கணவன் – மனைவி மீது தாக்குதல் நடத்தினார் எனக் கூறப்படுகின்றது. அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் கணவனையும் மனைவியையும் கண்மூடித்தனமாகக் குத்தினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வயிறு, கை, கால்கள் போன்ற பல இடங்களில் கத்திக் குத்துக்கு இலக்கான கணவன் சம்பவ இடத்திலேயே மரணமானார். மனைவி படுகாயமடைந்தார். அவர்களின் கூக்குரல் சத்தம் கேட்டவர்கள் அங்கு ஓடிச் சென்று மனைவியை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளைமேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர். (ம)

# 11 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; குற்றவாளிக்கு 20 வருடச் சிறை

### வவுனியா நீதிமன்று அதிரடித் தீர்ப்பு

வவுனியா, மே 17

பதினொருவயதுச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபருக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து லட்சம் ரூபா நட்டஈடு செலுத்தவும் நீதிமன்று உத்தரவிட்டது.

வவுனியா – ஆச்சிபுரம் கிராமத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற மேற்படி குற்றச்செயல்தொடர்பானவிசாரணைகள் வவுனியா நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் நேற்று இந்தத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதேகுற்றவாளிக்கு 20 வருட கடூழியச் சிறையும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 5 லட்சம் ரூபா நட்டஈடும் வழங்கி நீதிபதி தீர்ப்பளித்தார்.

நட்டஈட்டுப்பணத்தைசெலுத்தத்தவறும் பட்சத்தில் மேலும் ஒருவருடகடூழியச்சிறைத்தண்டனையும், தண்டப்பணம் செலுத்தத்தவறும்பட்சத்தில்ஒரு மாதம் சாதாரண சிறையும் வழங்கப்பட்டுள்ளது. (ம-100)

# கொக்கிளாயில் தடையையும் மீறி கடற்றொழிலில் சிங்கள மீனவர்கள்!

### தமிழ் மீனவர்கள் தரப்பில் அதிருப்தி



முல்லைத்தீவு, மே 17

நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி, அடாத்தாக கொக்கிளாய் சிங்கள மீனவர்கள் சட்டவிரோதத் தொழிலில் ஈடுபடுகின்றனர் எனத்தமிழ் மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் கரைவலைப்பாடுதொடர்பான வழக்குமுல்லைத்தீவுநீதிமன்றில் நடந்து வருகின்றது. வழக்கைக் கவனத்தில் எடுத்த நீதிமன்றம் சர்ச்சைக்குரிய பகுதியில் தொழில் புரியத் தடைவிதித்தது.

எனினும், இந்தத் தடையையும் மீறி சிங்களவர்கள் அங்கு நேற்று தொழிலில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டமையை அடுத்து அதுகுறித்து கடற்றொழில், நீரியல்வளத் திணைக்களத்துக்கு உடன் அறிவிக்கப்பட்டது. அதிகாரிகளும் வந்தனர். அனுமதிப் பத்திரமின்றி தொழில் செய்த குற்றச்சாட்டில் ஒருவரை மட்டுமே அவர்கள் கைது செய்தனர். ஒரு தொகுதி வலை மட்டுமே அவர்களால் கைப்பற்றப்பட்டது. சம்பந்தப்பட்டோர் பயன்படுத்திய பாரிய உபகரணங்கள், டிராக்டர் எவையும்கைப்பற்றப்படவில்லை.

இந்த விடயம் குறித்துக் கண்டறிவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கடற் கரைப் பகுதிக்கு வந்த நேரத்தில் இருந்தே உயர்மட்டங்களிலிருந்து அவர்களுக்கு அழுத்தம் தரும் பல தொலைபேசி அழைப்புகள் வந்தன என்று கூறப்படுகின்றது.

எனினும், ஊடகவியலாளர்கள் நின்று தீவிரமாக நடப்பவற்றை அவதானத்தின் பேரில் அனுமதிப் பத்திரமின்றி தொழில் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டார். ஒரு தொகை வலை மட்டுமே கைப்பற்றப்பட்டது.

இது குறித்து கருத்து வெளியிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் "அந்த இடத்தில் 120 மீற்றர் பிரதேசமே சர்ச்சைக்குரியது. அவர்கள் தொழில் செய்த இடம் அதற்குள் அடங்கவில்லை. அதனால் நாம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது."- என்றார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 * 09 * 1955



இறப்பு 15 * 05 * 2017

## கனகரட்ணம் ஜெயபாலன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நோர்வே Stranda, Oslo ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ஜெயபாலன் அவர்கள் 15.05.2017 திங்கட்கிழமை Oslo வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரராசசேகரம் ஞானசவுந்தரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தேவிகா அவர்களின் அன்புக் கணவரும், கிஷோர், துஜிக்கா, மிதுர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிபாலன்(நோர்வே), தேவபாலன்(ஆசிரியர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேசவராஜா(இந்தியா), கோகுலதாஸ்(இந்தியா), ரஞ்சனா(கனடா), தேவகாந்தன்(லண்டன்), முரளிதரன்(லண்டன்), நவநீதராஜா(லண்டன்), சிவசாயிராம்(லண்டன்), எழிலரசி(நோர்வே), மாலினி(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தில்லைராஜன்(கனடா) அவர்களின் அன்புச் சகலனும், புஸ்பராணி, சசிதாமணி, குமுதினி, ராஜினி, பத்மசோதி, அஜந்தா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், நிகேர்தனா(நோர்வே), கோபனா(நோர்வே), காருண்யா (நோர்வே), பிரவினா(இலங்கை), விக்கினப்பிரியன்(இலங்கை) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (19.05.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் - மு.ப. 11.30 மணிவரையுள்ள நேரத்தில் Ostre Gravlund, Tvetenveien 7 0661 Oslo, Norway இல் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் Alfaset Krematorium Nedre Kalbakkvei 99 101 Oslo, Norway இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கண்ணகி அம்மன் கோவிலடி,**
**வட்டு. மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**
T.P.: 021 225 0219
077 372 0129

(R/062)

தகவல்:
**க.தேவபாலன்.**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிஹாம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2017 இல் அச்சிட்டப்பட்டு வெளியிடப்பெற்றது.